தரம் 5 – 11 வரை

எண்: 06 எழுத்து: 04

ஏப்ரல் 2012

10 APR 2012

AHARAM அகரம்



World Today

Des: Sinan



மனித மூளை

30/-

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏப்ரல் மாதத்தில்...

ஏப்ரல் 2: புகழ்மிக்க பல சிறுவர் கதைகளைப் படைத்த ஹேன்ஸ் கிறிஸ்டியன் என்டர்ஸன் 1805 இல் பிறந்தார்.

ஏப்ரல் 4: கணிதவியலாளரான ஜோன் வென் 1923 இல் காலமானார்.

ஏப்ரல் 10: கவிஞர் கலீல் ஜிப்ரான் அவர்கள் 1931 இல் மரணமடைந்தார்கள்.

ஏப்ரல் 12: முதல் விண்வெளி வீரரான யூரி ககாரின் 1961 இல் 'வொஸ்டொக்' விண்கலத்தில் 89.34 நிமிடங்களில் ஒரு முறை புவியைச் சுற்றி வந்தார்.

ஏப்ரல் 17: மாபெரும் விஞ்ஞானியான பெஞ்சமின் பிராங்ளின் 1790 இல் இறந்தார்.

ஏப்ரல் 24: வானொலியைக் கண்டு பிடித்த விஞ்ஞானி மார்க்கோணி 1874 இல் பிறந்தார்.

ஏப்ரல் 26: உலகம் போற்றும் ஆங்கில நாடக ஆசிரியரான வில்லியம் ஷக்ஸ்பியர் 1564 இல் பிறந்தார். அவர் 1616 ஏப்ரல் 23 ல் இறந்தார்.

ஏப்ரல் 28: சர்வாதிகாரி முசோலினி 1945 இல் இத்தாலியில் இறந்தார்.

facebook Like

www.facebook.com/aharamJmf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரம்

PUBLIC LIBRARY
JAFFNA

எண்: 06 ஏப்ரல், 2012 எழுத்து: 04

உள்ளே...


மனித மூளை 06

15

13

தொடர்பாடல் திறன்

உங்களை வெல்லுங்கள் 20

பிரதம ஆசிரியர்
ஏ.ரி.எம். நௌபல்

ஆலோசனைக் குழு
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

ஆசிரியர்
எம்.ஏ.எல்.எம். பஸ்லுல் பாரிஸ் (நளீமி)

உதவி ஆசிரியர்
ஜே.எம். அஸீம் (நளீமி)

தளக் கோலம்
ஏ.ஏ.முஹம்மத் பவாஸ் (இஸ்லாஹி)

சந்தா விபரம்
1 வருட சந்தா 550 /-
6 மாத சந்தா 275 /-

தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமடகொட வீதி,
கொழும்பு - 09.
தொ.பே: 011 268 9324, 011 720 6575
பெக்ஸ்: 011 2686030
Email: aharamipc@gmail.com
www.facebook.com/aharamJmf

கலாநிதி ஃபூல் அந்நஜ்ஜார் 36

09

32

பாடத்திட்டம்

விஞ்ஞானம் 33
வரலாறு 18
தமிழ் 30
புலமைப் பரிசில் 38

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டம் கட்டமாக முன்னேறுவோம்; வெற்றிப் பாதையில் பயணிப்போம்!

மா மாணவர்களாகிய நீங்கள் பாடசாலை விடுமுறையில் குதூகலமாயிருந்து அகரம் படித்துக் கொண்டிருப்பீர்கள். நல்ல பல விடயங்களைக் கற்றுத் தரும் அகரம் உங்கள் வாழ்வின் முன்னேற்றத்திலும் வெற்றியிலும் பல்வேறு காத்திரமான பங்களிப்புகளை நல்கியிருக்கும் என நம்புகிறோம். உங்கள் கல்விக்கு வழிகாட்டும் ஒரு நல்லாசானாகவும் சிறந்த நண்பனாகவுமே நீங்கள் அகரத்தை நேசிப்பீர்கள் என நம்புகிறோம்.

உங்கள் எதிர்பார்ப்புகள் ஒருபோதும் வீண்போகா! அதேநேரம் நீங்கள் உற்சாகமாகப் பணியாற்றவே அகரம் வழிசெய்கிறது. கற்றுக் கொள்ளவும் பயன்பெறவுமான வழிவகைகளையே நாம் உங்களுக்கு கற்றுத் தர விரும்புகிறோம். நீங்கள் விடுமுறைகளில் சுறுசுறுப்பையும் உற்சாகத்தையும் இழந்துவிடக் கூடாது. உங்கள் கல்வியின் வெற்றிகூட ஆர்வமாய் கற்பதில்தான் தங்கியுள்ளது.

பாடசாலை விடுமுறையை பயனுள்ளதாகப் பயன்படுத்துவதற்கு நாம் பல்வேறு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி வருகிறோம். ஏப்ரல் மாத குறுங்கால விடுமுறையைப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்குரிய உயர்ந்த மனப்பாங்கோடு இருப்பீர்கள் என்றே நாம் எதிர்பார்க்கிறோம்.

எமது வாசகர்களாக இருந்து கற்றுப் பயன்பெற்ற க.பொ.த (சா/த) மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறு வெளியாகும் காலமும் இதுதான். எனவே, க.பொ.த (சா/த) பரீட்சைக்கு முன்பிலிருந்தே நாம் பரீட்சைக்கு தயாராவதற்கான வழிகாட்டல்களையும் பரீட்சைக்குப் பின்னரான வழிகாட்டல்களையும் வழங்கியிருந்தோம். தொடர்ந்தும் வழிகாட்டல்களை வழங்குவோம், இன்ஷா அல்லாஹ். எதிர்காலத் தலைவர்களான நீங்கள் வளமாகவும் சுபிட்சமாகவும் வாழ்வதற்கான அறிவுப் பாதையைத் திறந்து தரவே நாம் முயற்சிக்கிறோம். உங்கள் பரீட்சைப் பெறுபேறுகள் கிடைத்ததும் நீங்கள் உயர்கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவீர்கள்.

மாணவர்களுக்கு நாம் கற்றுக் கொடுக்க விரும்பும் மற்றொரு விடயம் குறித்து கவனம் செலுத்த விரும்புகிறோம். பொதுவாக வாழ்விலும் குறிப்பாக கற்றல் செயற்பாட்டிலும் நீங்கள் கட்டம் கட்டமாக செயற்பட்டு முன்னேற வேண்டும் என்பதே நாம் அழுத்திச் சொல்ல விரும்பும் விடயமாகும். படிப்படியான (Gradual) முன்னேற்றம்தான் நீடித்து நிலைக்கக் கூடியதுமாகும். ஏப்ரல் விடுமுறை என்பது கல்வியாண்டின் முதலாவது கட்டம் எனக் கூறலாம். இந்தக் கட்டம் வரை நீங்கள் எவ்வாறு செயற்பட்டிருப்பீர்கள் என்பதும் இக் கட்டத்தின் பின்னர் நீங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதும் மிக முக்கியமானவை.

இந்தக் கட்டம் வரையான உங்கள் செயற்பாட்டிலிருந்து நீங்கள் பல அனுபவங்களைப் பெற்றிருப்பீர்கள். அத்தகைய அனுபவங்களிலிருந்து நீங்கள் கற்றுக் கொண்டிருப்பீர்கள். பெற்ற அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்வது உங்கள் எதிர்காலத் திட்டமிடல் வினைத்திறன் மிக்கதாகவும் வெற்றிகரமானதாகவும் அமைய உதவும். இவ்வாறு நீங்கள் கற்ற அனுபவங்களிலிருந்து அடுத்த கட்டத்தை முதலில் திட்டமிடுங்கள். நீங்கள் அடுத்த விடுமுறையில் ஓய்வெடுக்கும்போது நீங்கள் திட்டமிட்டது எந்தளவு உங்களுக்கு வெற்றியளித்துள்ளது என்பதை சிந்திக்க இது உதவும்.

நீங்கள் எத்தகைய திறமை நிறைந்தவர்களாக இருந்தாலும் தரம் ஒன்று, தரம் இரண்டு... தரம் ஐந்து..., க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த), பல்கலைக்கழக இளமானிப் பட்டம், முதுமானிப் பட்டம் என்று கட்டம் கட்டமாகத்தான் கடக்க வேண்டும் என்பது நீங்கள் அறிந்ததே! மனிதன் படைக்கப்பட்டதும் கட்டம் கட்டமாகத்தான். வாழ்வும்கூட குழந்தை, இளமை, முதுமை என கட்டம் கட்டமாகவே கட்டமைக்கப்பட்டுள்ளது. எனவே, இதுதான் நியதி. இந்தப் படிமுறை நியதி அடிப்படையில் உங்கள் வாழ்வையும் கட்டம் கட்டமாகப் பிரித்துத் திட்டமிட்டு உங்கள் செயற்பாடுகளை அமைத்து வெற்றிப் பாதையில் பயணியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் அற்புதம் அல்குர்ஆன்

அல்குர்ஆன் கூறும் கதைகள்

அபூ ஹானிம்

சென்ற இதழின் தொடர்...

நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அல்லாஹ்வின் தூதை எத்திவைத்தபோது அதை ஏற்றுக் கொண்டவர்கள் வெகு சிலர். சமூகத் தலைவர்கள் சத்தியத்தை ஏற்றுக் கொண்டவர்களை இழிவானவர்களாகக் கருதினர். அவர்கள் தமது அந்தஸ்துக்கு நிகரானவர்கள் அல்ல. ஆதலால் அவர்களிருக்கும் அணியில் தாம் இணைய முடியாது என்று பிடிவாதமாகவே பதிலளித்தனர்.

கப்பல் கட்டிய நபி

அந்தோ பரிதாபம்! பிரகாசம் வந்தபோது இருளைத் தெரிவு செய்து கொண்டார்கள்; வளமிக்க வாழ்வு கிடைத்தபோது வறுமையை விரும்பினார்கள்; அறிவு ஊற்றெடுத்தபோது அறியாமையால் சூழப்பட்டு விட்டார்கள்; சத்தியப் பிரகாசத்தை தம் வாய்களால் ஊதி அணைக்க முயற்சித்து விட்டார்கள், இவர்கள்தான் அறிவீனர்கள்; இழிவானவர்கள். உலகில் மட்டுமா? இல்லை உலகிலும் மறுமையிலும் இழிவானவர்கள். எவர்களை இழிவானவர்கள் என்று இவர்கள் கருதினார்களோ அவர்கள் கண்ணியம் பெற்று வெற்றி பெற்று விட்டார்கள்.

நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது நாவன்மை மிக்க அறிவுபூர்வமான வினாக்களுக்கு பதில் அளிக்க முடியாமல் அச் சமூகத் தலைவர்கள் திண்டாடினர். விழி பிதுங்கி நின்றனர். அதனால், "நூஹே! நீர் எம்மோடு வாதிட்டுவிட்டீர். அதுவும் அளவுக்கு அகதிகமாக வாதம் புரிந்து விட்டீர். நீர் சொல்லும் செய்திகள் உண்மையெனில் நீர் எச்சரிக்கின்ற வேதனையைக் கொண்டு வாரும்" என வாதத்திற்கு பதில் வாதம் முன்வைக்க முடியாமல் இறைதண்டனையை கேட்டுப் பெற்றனர்.

நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தமது சமூகத்தின் அறிவீனத்தின் உச்சநிலையைப் புரிந்து கொண்டார்கள். அவர்கள் மீது இரக்கமும் கருணையும் அவர்களிடமிருந்து பீறிட்டுப் பாய்ந்து தன் சமூகத்தை நோக்கி,

"நிச்சயமாக நீங்கள் அறியாமையின் இருளில் மூழ்கியுள்ளீர்கள். உங்களுக்கு வேதனையைக் கொண்டு வருவதற்கும் அதிலிருந்து பாதுகாப்பதற்கும் நான் யார்? நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான். ஆனால், உங்களது இரட்சகன் ஒரே இரட்சகன் என்று எனக்கு வஹி அறிவிக்கப்படுகிறது. எனக்கு எது ஏவப்பட்டுள்ளதோ அதனைத்தான் நான் உங்களுக்கு எத்திவைக்கிறேன். சத்தியத்தை ஏற்று அல்லாஹ்வை வணங்கி வழிபடுவீர்களாயின் இன்பங்கள் நிறைந்த ஒரு வாழ்வை உங்களுக்கு சுபசோபனமாக சொல்கின்றேன். நீங்கள் அதை மறுத்தால் நோவினை தரும் வேதனையுண்டு என்பதை மீண்டும் எச்சரிக்கிறேன். அல்லாஹ் தான் நாடியதை செய்யும் ஆற்றல் மிக்கவன். அவன் நாடினால் உங்களுக்கு நேர்வழி காட்டுவான். அல்லது கால அவகாசம் அளிப்பான். இல்லையென்றால் கடுமையாகத் தண்டிப்பான்.

அம் மக்கள் நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை நிராகரித்தது மட்டுமா?! அவர்களை துன்புறுத்தி வேதனை செய்தார்கள். ஆனால், பொறுமையின் சிகரமாய் இருந்து பொறுமை காத்தார்கள். எப்படி அவர் பொறுமையிழக்க முடியும்! அவர் உலுல் அஸ்ம் எனும் தம் பணியில் உறுதியாய் இருந்த பொறுமை காத்த நபிமார்கள் ஐவருள் ஒருவர் அல்லவா! அவர் என்ன வெறுமனே பத்து இருபது வருடங்கள் மட்டும் அச் சமூகத்தோடு வாழ்ந்து பணி செய்தவரா? இல்லை 950 வருடங்கள் தன் பிரசாரப் பணியில் பொறுமை காத்து மிக்க உறுதியோடு உழைத்தவர். ஆம், அவர் உலுல் அஸ்ம்களில் ஒருவர்!

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

عَنْ عَبْدِ اللهِ بْنِ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: خَيْرُ الأَصْحَابِ
عِنْدَ اللهِ تَعَالَى خَيْرُهُمْ لِصَاحِبِهِ وَخَيْرُ الْجِيْرَانِ عِنْدَ اللهِ تَعَالَى خَيْرُهُمْ لِجَارِهِ (الترمذي)

நபி (ஸல்லல்லாஹுஂ அலைஹி வஸல்லம்) அவர்கள் நவின்றதாக அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரழியல்லாஹுஂ அன்ஹுஂ) அவர்கள் அறிவிக்கிறார்கள். “தனது நண்பர்களிடம் சிறந்தவரே அல்லாஹ்விடத்தில் சிறந்தவர். தனது அண்டை வீட்டாரிடம் சிறந்தவரே அல்லாஹ்விடம் சிறந்தவர் ஆவார்.” (அத்திர்மிதி)

உலகத்தில் மனித உயிர்கள் நிலைத்திருப்பதற்கான காரணங்களுள் மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்பும் ஒன்றாகும். அவற்றுள் மிக உன்னதமான உறவுதான் நட்பாகும். நட்பு மனித வாழ்வில் இன்றியமையாத ஒன்று. இன்று வாய்மையும் நேர்மையும் தூய அன்பும் கொண்ட நண்பர்களை மனிதன் தேடிக் கொண்டிருக்கிறான். ஏனெனில், நல்லதொரு நட்பு இறைவன் வழங்கும் மகத்தான அருட்கொடைகளுள் ஒன்றாகும். ஒருவன் நல்ல வழியில் செல்வதாயினும் தீய வழியில் செல்வதாயினும் அதில் பாரிய பங்கினை வகிப்பவன் அவனது நண்பனே! ஆகவேதான், நபியவர்கள் நல்ல நண்பர்களைத் தேடித் தெரிவு செய்துகொள்ளுமாறு கற்றுத் தந்துள்ளார்கள்.

பல்வேறு விதமாக இருவருக்கு மத்தியில் நட்பு ஏற்படுகின்றது. இவ்வாறு ஏற்படும் உறவுக்கு மத்தியில் பல கடமைகளும் உரிமைகளும் காணப்படுகின்றன. இவற்றை ஒரு மனிதன் நல்ல முறையில் பேணி தனது நட்புக்கு பங்கம் விளைவிக்காது, அல்லாஹ்வுக்காக நட்புக் கொண்டால் மறுமையில் அவனுக்கு மகத்தான நற்கூலி காத்திருக்கிறது.

மறுமையில் எந்த நிழலும் இல்லாத அந்நாளில் அல்லாஹ் ஏழு கூட்டத்தினருக்கு தனது அர்ஷின் நிழலை வழங்குகிறான். அக்கூட்டத்தில் ஒரு கூட்டம்தான் அல்லாஹ்வுக்காக நட்புக் கொண்ட கூட்டமாகும் என நபியவர்கள் கூறினார்கள்.

நட்பு எனும் உறவு வயது வித்தியாசமின்றி அனைவருக்கு மத்தியிலும் தோன்றலாம். எனினும் மாணவர்களுக்கு மத்தியில் ஏற்படுவதே அதிகமாகும். இவ்வாறு ஏற்படுகின்ற நட்பு தூய்மையானதாக அமைய வேண்டுமானால் நம்பிக்கை, புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்பு போன்றன அவசியமாகும்.

ஏனெனில், ஒருவனுக்கு நல்ல நண்பன் கிடைத்து விட்டால் அவன் தனக்குள் இருக்கின்ற உளக் கிடக்கைகளை சுக, துக்கங்களை தனது நண்பனிடம் பகிர்ந்து கொண்டு ஆறுதல் அடைவான். மகிழ்ச்சியிலும் துக்கத்திலும் பங்கு கொள்ளும் இவ் உண்மையான நண்பனை தனது வாழ்வின் அதிகமான சந்தர்ப்பங்களில் நினைவுபடுத்துவான்.

ஆகையால், நட்பு என்ற வட்டத்திற்குள் வாழும் மனிதன் தனது நண்பனுக்கு நல்லவனாக இருக்க வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகிறது.

உலகில் சிறந்த நண்பனாக வாழ்ந்தவர்கள்தான் எமது தூதர் (ஸல்லல்லாஹுஂ அலைஹி வஸல்லம்) அவர்கள். ஸஹாபாக்களுடன் வைத்திருந்த நட்பு நல்லதொரு முன்மாதிரி. அவர்கள் அனைவரும் மற்றவரை விட நபியவர்கள் தன்னுடன்தான் அதிக நட்பு வைத்திருக்க வேண்டும் என்று அதிகம் ஆசைப்படுமளவு நபியவர்களின் நட்பு சிறப்புமிக்கதாகக் காணப்பட்டது.

ஆகவே, நாமும் எமது நண்பர்களுக்கு தொல்லைகள் செய்யாது, அவர்களது கருத்துக்களையும் மதித்து, தவறிழைக்கும்போது நல்ல முறையில் அதனை சுட்டிக்காட்டி, எமது மகிழ்ச்சியில் அவர்களையும் பங்கு கொள்ளச் செய்து அவர்களுக்கு நல்ல நண்பர்களாக நாம் வாழ முற்படுவோம். மறுமையில் அல்லாஹ்வின் அன்பைப் பெறுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளை எதிர்கொள்ளும் தைரியம்

எப்போதும் நீங்கள் நினைத்த மாதிரியே அனைத்தும் நடைபெறாது. நினைக்காதவாறு பல நிகழ்வுகள் நிகழ்வுறும். அவ்வாறான நிகழ்வுகளை நீங்கள் எவ்வாறு எதிர்கொள்வீர்கள்?

நபி (ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றதன் பின்னர் கண்ணியத்தோடும் பலத்தோடும் மக்கள் ஆதரவோடும் வாழ்ந்தார்கள். மக்காவில் குறைஷிகளால் கொடுமைப்படுத்தப்பட்ட ஸஹாபாக்கள் மதீனாவில் அவ்வாறான பிரச்சினைகளின்றி வாழ்ந்தார்கள். இது குறைஷிகளுக்கு வெறுப்பை ஊட்டியது. இதனால் அவர்கள் எப்படியாவது நபியவர்களை மீண்டும் மக்காவுக்கு அழைத்து அவர்களை தொல்லைப்படுத்த நினைத்தனர். எனவே, குறைஷிகள் உபை இப்னு சலூல் என்ற முனாபிக்கிடம் முஸ்லிம்களைத் திருப்பியனுப்பும்படியும் இல்லாவிட்டால் போர் தொடுப்பதாகவும் கடிதம் எழுதினர். அவன் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாததோடு இஸ்லாம் வந்ததால் மதீனாவில் தனக்கிருந்த அதிகாரம் இல்லாமற்போய் விட்டதாக எண்ணிக் கொண்டிருந்தான்.

இந்தக் கடிதம் கிடைத்ததும் அதனை செயற்படுத்துவதற்காகவும் தான் இழந்த அதிகாரத்தை திருப்பிப் பெறுவதற்காகவும் உபை இப்னு சலூல் தயாராகிறான். ஏனையவர்களையும் யுத்தத்திற்குத் தயாராகும்படி பணிக்கிறான். இதனையறிந்த நபியவர்கள் அவ்விடம் விரைகிறார்கள். அங்கு கூடியிருந்தவர்களைப் பார்த்து,

"குறைஷிகள் உங்களை எச்சரித்ததால் நீங்கள் பயந்துவிட்டீர்களா! அவர்கள் உங்களுக்கு செய்யும் சூழ்ச்சியை விட நீங்கள் உங்களுக்குச் செய்யும் சூழ்ச்சிதான் மிக மோசமானது. குறைஷிகளின் கதையைக் கேட்டு உங்களது பிள்ளைகளிடமும் சகோதரர்களிடமும் நீங்கள் போர் புரிய முனைகிறீர்களா? என்று கேட்டார்கள்." (அல்புகாரி) உடனே, நபியவர்களுடனும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுடனும் யுத்தம் புரியத் தயாரான அவர்கள் கலைந்து சென்று விட்டனர்.



நபியவர்கள் பிரச்சினையின் ஆழத்தையும் அபாயத்தையும் புரிந்து தைரியத்தோடும் சாணக்கியமாகவும் ஆரம்பத்திலேயே அதனைக் களைந்தமை மிகப் பெரிய போரையும் ஆபத்தையும் தடுத்துவிட்டது.

இவ்வாறு உங்கள் வாழ்விலும் நீங்கள் எதிர்பாராத நிகழ்வுகள் நடக்கலாம். எதிர்பாராத பிரச்சினைகள் வரலாம். திடீர் சவால்கள் நிகழலாம். ஆனால், அவற்றையெல்லாம் எவ்வாறு சாதுர்யமாக எதிர்கொள்வது என்ற சாணக்கியம்தான் மிக முக்கியம். இந்த சாதுர்யத்தை, விவேகத்தை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு எதற்கும் தயாராயிருக்கும் மனோநிலையும் உங்களைச் சூழ உள்ள நிகழ்வுகள் பற்றிய அவதானமும் விழிப்புணர்வும் தேவை. அதுமட்டுமல்லாமல் எப்போதும் உங்கள் செயற்பாடுகளில் சீரியஸுும் கவனக் குவிப்பும் அவசியம். எங்கே எந்த நிகழ்வு நடந்தாலும் அதன் பாரதூரத்தையும் அதன் விளைவுகளையும் ஊகித்தறியும் ஆற்றல் முக்கியம்.

எத்தகைய பிரச்சினைகள் வந்தாலும் எதிர்கொள்ளும் மனோ திடம் உங்களுக்குத் தேவை. அந்தத் திடமான உள்ளம்தான் சவால்களை, பிரச்சினைகளை எதிர்கொண்டு நம்பிக்கையோடு பயணிக்கச் செய்யும். எனவே, நாமும் இத்தகைய தைரியத்தை வளர்த்துக் கொள்வோமாக! ■

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலிப் அலி (இஸ்லாஹி) www.aliaalif.tk

மனித மூளை

மனித உடலில் மிக முக்கியமான ஓர் உறுப்புதான் மூளை. இன்று மனிதன் இத்துணை விஞ்ஞான தொழில் நுட்பத் துறைகளிலும் அதீத வளர்ச்சியடையக் காரணமும் அல்லாஹ் அவனுக்கு வழங்கியுள்ள இவ் அற்புத மூளைதான். மனித உறுப்புகளி லேயே அல்லாஹ் உயரத்தில் வைத்திருப்பதும் மூளையைத்தான். மண்டையோட்டுக் குழியில் மிகப் பாதுகாப்பாக அல்லாஹ் மூளையைப் பத்திரப்படுத்தி வைத்துள்ளான். தடிப்பான மண்டையோட்டின் எலும்புகளாலும் முதுகந் தண்டு நீர்மம் (cerebros pinal fluid) எனும் ஒரு வகை நீர்மத்தாலும் மூளை பாதுகாக்கப்பட் டுள்ளது. நாம் ஓடும்போதும் பாயும்போதும் ஏற்படும் அதிர்வுகள், புறச் சேதங்கள், இரத்த மண்டலத்திலிருந்தும் இரத்தம் மூலம் பரவும் நோய்கள் என்பவற்றிலிருந்தும் குருதி மூளை வேலி (blood-brain barrier) எனும் பாதுகாப்பு அரணின் மூலம் எமது மூளை மிகக் கவனமாகப் பாதுகாக்கப்பட்டுள்ளது.

மனித மூளை 1.5 கிலோ கிராம் நிறையைக் கொண்டிருக்கும். ஆண்களின் மூளையைவிடவும் பெண்களின் மூளை அளவில் குறைவாகவே காணப்படும். மூளையானது எமது உடலை இரண்டு முறைகளில் கட்டுப்படுத்துகிறது. ஒன்று நாம் நினைத்துச் செய்யாத (இதயத் துடிப்பு, சமிபாடு, ஓமோன்களைச் சுரக்கச் செய்தல், இரத்தச் சுத்திகரிப்பு போன்ற) இயல் பான சில வேலைகள்; நாமாகவே நினைத்துச் செய்கின்ற (சிந்தித்தல், நடத்தல், பேசுதல், பார்த் தல் போன்ற) வேலைகளையும் நமது மூளை கட்டுப்படுத்துகின்றது.

ரோஜர் ஸ்பொரி, மைக்கல் கஸாகினிகா ஆகிய இரு ஆராய்ச்சியாளர்களும் 1967இல் மூளையின் செயற்பாடுகள் பற்றி பரிசோதனை களைச் செய்து எமது மூளையின் வலது பகுதியும் இடது பகுதியும் தனித்தனியாக வளர்வதாகவும் வலது புற மூளைப் பகுதியானது உடலின் இடதுபுறச் செயற்பாடுகளையும் இடதுபுற மூளைப் பகுதி உடலின் வலப்புறச் செயற்பாடு களையும் கட்டுப்படுத்துவதாகவும் கண்டறிந்த னர். பிற உயிர்களைவிட இத்தகைய சிக்கலான உயர் செயற்பாடுகளைச் சிறப்பாகக் கையாளும் திறனை மனித மூளை பெற்றிருப்பது மிகப் பெரிய ஓர் அருளாகும்.

எமது மூளை முக்கியமான மூன்று பணிகளைப் புரிகிறது. செய்திகளைக் கிரகித்து ஏற்றுக் கொள்ளு தல், உடல் உறுப்புகளுக்கு கட்டளைகளை அனுப் புதல், செய்திகளைச் சேகரித்து அறிவுப் பணிகளைத் தொடர்தல் என்பனவே அவையாகும். அவ்வாறே மூளை மூன்று பகுதிகளை உள்ளடக்கியிருக்கிறது. அவை முன்மூளை, நடுமூளை, பின் மூளை என்பன வாகும். முன் மூளையானது முன்நெற்றி எலும்புடன் (Frontallobe) இணைந்தே அமைந்துள்ளது. இவ் வெலும்பு முன்மூளையைப் பாதுகாக்கும் தொழி லைச் செய்கின்றது. நடுமூளையானது கீழிருந்து வரும் முதுகந்தண்டின் மேல்பகுதியுடன் இணைந்து காணப்படும். பின் மூளையானது நடு மூளையின் கீழால் மறைந்திருக்கும்.

தற்போது நாம் மூளையுடன் தொடர்புபட்ட, இன்று நவீன விஞ்ஞானம் கண்டுபிடித்துக்கூறியுள்ள ஆனால் 1400 வருடங்களுக்கு முன்பே அல்லாஹ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்குர்ஆனில் குறிப்பிட்டுக்காட்டிய அற்புதமானதொரு விடயத்தின்பால் எமது கவனத்தைக் குவிப்போம். இது எமது ஈமானுக்கு உரமூட்டுவதாக இருக்கும், இன்ஷா அல்லாஹ்.

மூளையின் பிரதானமான முன்மூளை பற்றி அல்லாஹ் திருமறையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.

كلا لئن لم ينته لنسفعا باالناصية ناصية كاذبة خاطئة

“அவன் இச்செயலிலிருந்து விலகிக் கொள்ளாவிடின் நிச்சயமாக (அவனது) முன்நெற்றியை (நாஸியாவை)க் கடுமையாக இழுத்து விடுவோம். அது தவறிழைத்து பொய்யுரைக்கும் முன்நெற்றியாகும்.” (96: 15, 16)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைத் தொழவிடாமல் தடுக்கப்போவதாக அபூ ஜஹ்ல் சூளுரைத்தபோது அவனைக் கண்டித்து மேற்கூறிய வசனம் இறக்கப்பட்டது. இந்த நாஸியாவை அல்லாஹ் தொடர்ந்து வர்ணிக்கும் போது அது “தவறிழைக்கக்கூடியதும் பொய்யுரைக்கக்கூடியதாகும்” எனக் குறிப்பிடுகின்றான்.

நாஸியாவைப் பற்றி விளங்க சற்று ‘முன்மூளை’ பற்றிய அறிவும் அவசியப்படுகிறது. முன்மூளையில் அடுக்கடுக்காகப் பல மடிப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன. இம்மடிப்புகள்தான் முன் மூளையின் முக்கால் பாகத்தையே ஆக்கிரமித்துள்ளன. இந்த முன்மூளையின் மேலால் 4.5mm அளவில் ஒருவகை மெல்லிய உறை அமைந்துள்ளது. இதுவே Cortex எனப்படுகிறது. இதில் 800 கோடி நரம்புச் செல்கள் காணப்படுவதோடு அவற்றுக்கு இடையேயுள்ள ஓர் அங்குல இடைவெளிக்குள் 16,000Km அளவு நுட்பமான பல்வேறு மடிப்புகளினாலான அமைப்புகள் காணப்படுகின்றன. இம்முன் மூளை மடிப்புகளே மனிதனது ஆற்றல்களையும் திறமைகளையும் ஆளுமைகளையும் தீர்மானிக்கின்றன.

ஒரு விடயத்தில் தீவிரமாக ஈடுபடுவதிலும் சிந்திப்பதிலும் விடயங்களை ஞாபகத்தில் இருத்திக் கொள்வதிலும் இத்தோல்பகுதியின் (Cortex) பங்கு அதிகமானது. ஒரு விடயத்தை உணர்ந்து அதனை ஆரம்பிப்பதிலும் பிரித்தறிவதிலும் இது பாரிய செல்வாக்குச் செலுத்துகிறது. இவையாவும் அமைந்துள்ள முன்மூளையே 'Cerebrum' எனப்படுகின்றது. அல்குர்ஆன் இதனை ‘நாஸியா’ என்றழைக்கிறது.

ஜித்தாவிலுள்ள அப்துல் அஸீஸ் பல்கலைக்கழகத்தின் மருத்துவத் துறைப் பீடாதிபதி பேராசிரியர் முஹம்மத் யூசுப், நாஸியா பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டதன் பின்னர் இவ்வாறு கூறுகின்றார்:

“நாஸியாவே மனிதனது நடத்தைகளைத் தீர்மானிக்கிறது. ஒரு மனிதனை உண்மை பேசவும் பொய் பேசவும் நல்லது செய்யவும் தீயது செய்யவும் தூண்டுவது நாஸியாவேயாகும். காரியங்களைச் செய்வதற்குத் தீர்மானம் எடுக்குமிடமாக நாஸியாவே காணப்படுகிறது.”

நாஸியா வழங்கும் தீர்மானங்களை வைத்தே உடல் அவயவங்கள் கருமமாற்றுகின்றன. இது தொடர்பாக “Essentials of anatomy and physiology” என்ற கற்கை பின்வருமாறு விளக்குகின்றது:

“தூண்டுதல், திட்டமிடுதல் மற்றும் ஒரு விடயத்தை ஆரம்பித்து வைத்தல் போன்ற செயற்பாடுகளை முன்நெற்றியே செய்கின்றது. எனவேதான், அமெரிக்கா போன்ற நாடுகளில் தொடர்ந்தும் பெரிய பெரிய குற்றங்களைச் செய்துகொண்டிருக்கும் குற்றவாளிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் போகும் சந்தர்ப்பத்தில் அவர்களது மூளையின் முன்பகுதியில் உள்ள நாஸியாவை சத்திர சிகிச்சை மூலம் துண்டித்து அகற்றிவிடுகின்றனர். இதனால் அக்குற்றவாளி சுயமாகத் தீர்மானம் எடுத்து எதனையும் செய்யும் சக்தியிழந்து சொல்வதை மாத்திரம் செய்யும் ஒரு ரோபோ போன்று ஆகிவிடுகின்றான்.”

நாஸியா பற்றி Dr. கீத் மூர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

“நாஸியாவானது மனிதனைத் தீர்மானமெடுக்கவும் அவனது நடத்தைகளைக் கட்டமைக்கவும் செய்கின்றது. ஒருவன் பொய் சொல்ல நாடினால் பொய் சொல்வதா இல்லையா என்ற தீர்மானம் மூளையின் முன்நெற்றிப் பகுதியாலேயே (நாஸியா) எடுக்கப்படுகின்றது. அவன் ஒரு குற்றம் செய்ய நாடினாலும் அவ்வாறுதான்.”

Functional MRI of the brain

Functional MRI of the brain showing the area of lying in the prefrontal cortex

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடர்ச்சியாக பொய்யுரைக்கும் ஒரு பெண்ணை FMRI (Functional |Magnetic Resonance Imaging) தொழில்நுட்பம் மூலம் ஸ்கேனிங் இயந்திரத்தில் இட்டு கட்டம் கட்டமாக ஆய்வு செய்து பெறப்பட்ட புகைப்படங்களே இவை. இதில் சிவப்பு நிறத்தில் காணப்படுவது நாஸியாப் பகுதியாகும். அடுத்து இரண்டாவது படத்தில் நாஸியாவே மஞ்சள் நிறத்தில் காட்டப்பட்டுள்ளது. முதல் படம் உண்மை உரைக்கும் தறுவாயில் ஸ்கேனர் மூலம் எடுக்கப்பட்ட படம். அதனைத் தொடர்ந்து உள்ள ஏனைய படங்கள் அப்பெண் படிப்படியாகப் பொய்யுரைக்க ஆரம்பித்துள்ளமையைக் காட்டுகிறது. ஆரம்பத்தில் மிகத் தெளிவாகக் காட்சிதரும் நாஸியா படிப்படியாக பிரகாசம் குறைந்து இறுதியில் கருமை நிறமடைந்து காணமால் போயிருப்பதைக் காணலாம். பொய்யிலே உருண்டு புரண்டு மூழ்கிப் போனவர்களது நாஸியாவும் இவ்வாறுதான் கருமை படிந்து காட்சியளிக்கும்.

இங்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மொழிந்த ஒரு ஹதீஸை ஞாபகிப்பது சிறந்ததெனக் கருதுகின்றேன்.

"إن العبد إذا أخطأ خطيئة نكت في قلبه نكتة سوداء. فإن هو نزع واستغفر وتاب صقل قلبه. فإن عاد زيد فيها حتى تعلو قلبه فهو الران.'

“அடியான் பாவமானதொரு விடயத்தைச் செய்துவிட்டால் அவனது உள்ளத்திலே கருமை நிறப் புள்ளியொன்று படிகின்றது. அவன் அப்பாவத்தை விட்டு பாவமன்னிப்புத் தேடினால் அவனது உள்ளம் தூய்மையடைகின்றது. மீண்டும் அவன் பாவத்தின்பால் மீண்டு மூழ்கிப்போனால் அவனது உள்ளம் முழுதும் துருப்பிடித்து கருமையடைந்து விடுகின்றது.” (அத்திர்மிதி, அஹ்மத்) இதனைத் தொடர்ந்து நபிகளார் பின்வரும் வசனத்தை ஓதிக் காட்டினார்கள்:

அப்படியல்ல; அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்தவை அவர்களுடைய இருதயங்கள் மீது துருவாகப் படிந்துவிட்டன. (83:14)

உள்ளம் (மனம்) எங்குள்ளது என்பது இதுவரை அறியப்படாத நிலையில் அது தலைப் பகுதியில் இருக்க வேண்டும் என்ற கருத்து தற்போது விஞ்ஞானிகளாலேயே முன்வைக்கப்படுகிறது. அந்த வகையில் பார்த்தால் மனம் தலையிலிருக்கும் நாஸியாவாகவும் மேற்குறிப்பிட்ட நபிமொழி கூட இந்த நாஸியாவை (மனதை)க் குறிப்பதாகவும் இருக்கலாம். பொய் என்பது சகல பாவங்களுக்குமான நுழைவாயில் என்பதால் பொய் கூறுவபன் பல்வேறு பாவங்களையும் செய்து அவனது மனம் விரைவில் கருமையடைந்து விடுகின்றது.

பொய்யுரைப்பவர்களை இனங்காண்பதற்காக விஞ்ஞானிகளால் ஒரு சிறு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவ்வியந்திரத்தைத் தலையில் பொருத்திவிட்டால், ஒருவர் உண்மை பேசினாலோ பொய்யுரைத்தாலோ சிறு ஒலியுடன் கூடிய சிறு மின்குமிழை ஒளிரச் செய்து காட்டிக் கொடுக்கின்றது. இது நாஸியாவுடன் தொடர்புபடுத்தித் தயாரிக்கப்பட்டுள்ள ஒரு இயந்திரமாகும். பொய் சொல்வதில் வல்லவர்களையும் பச்சை பச்சையாகப் பொய்யுரைப்பவர்களையும் இவ்வியந்திரத்தால் இனங்காண முடியாது. காரணம் அவர்களது நாஸியா கருமை படிந்து போயிருப்பதாக இருக்கலாம்.

நாஸியா பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு விட்டு பேராசிரியர் கீத் மூர் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

“நாம் தற்போது அறிந்துகொண்டுள்ள இந்த முன்நெற்றியின் இயக்கங்கள் பற்றி வரலாற்றில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. மருத்துவ நூல்களில்கூட காணப்படவில்லை. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் காலம் முதல் அதன் பிற்பட்ட காலங்களில்கூட சிறு குறிப்புக்களோ விளக்கங்களோ கூட இருந்ததில்லை. ஆனால், அல்குர்ஆன் இதுபற்றி அன்றே குறிப்பிட்டுள்ளது. இதனால்தான் அல்குர்ஆன் அல்லாஹ்வின் வார்த்தைகள் என்றும் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவனது தூதர் என்பதும் உறுதியாகின்றது.”

“நாஸியாவானது மனிதர்களுக்கு மாத்திரமன்றி அனைத்து உயிரினங்களிடமும் காணப்படுகின்றது என்பதை பின்வரும் அல்குர்ஆனிய வசனம் கூறுகின்றது:

“எந்தவொரு ஜீவராசியாயினும் அவற்றின் முன்நெற்றியை (நாஸியாவை) அவன் (அல்லாஹ்) பிடித்துக் கொண்டே இருக்கின்றான்.” (11:56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமாஅத் தொழுகை

ஹிஜ்ரி 2 இல் விண்ணுலக யாத்திரை மேற்கொண்ட அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு பரிசாக வழங்கப்பட்டது ஐவேளைத் தொழுகை. இத்தொழுகையானது அனைத்து முஸ்லிம்களுக்கும் பொதுவானதொரு கடமை போலவே, எல்லாக் காலங்களிலும் நிறைவேற்றப்பட வேண்டியதுமான ஒரு கடமையாகும். இக்கடமையான தொழுகை பற்றியும் அதன் அவசியம், முக்கியத்துவம் பற்றியும் அல்குர்ஆனும் ஸுன்னாவும் அதிகமாக வலியுறுத்திக் கூறுகின்றன.

"தொழுகையையும் நிறைவேற்றுவீராக; நிச்சயமாக தொழுகை மானக்கேடான செயலிலிருந்தும் விலக்கப்பட்டதிலிருந்தும் தடுக்கும்." (ஸூரா அல்அன்கபூத் : 45)

பாவங்களை விட்டுத் தடுக்கின்ற இத்தொழுகை பற்றி இஸ்லாம் கூறும்போது, அதனை ஜமாஅத்தாகத் தொழுவது பற்றியும் அதனால் கிடைக்கும் பலன்கள் பற்றியும் கூறத் தவறவில்லை.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "ஒருவன் தனித்து நின்று நிறைவேற்றும் தொழுகையை விட மற்றொருவனுடன் சேர்ந்து நிறைவேற்றும் தொழுகை ஈமானின் முன்னேற்றத்துக்கு காரணமாக அமையும். மேலும், ஒருவருடன் சேர்ந்து அவர் நிறைவேற்றும் தொழுகையை விட இருவருடன் சேர்ந்து நிறை வேற்றும் தொழுகை மென்மேலும் ஈமான் செழித்தோங்கக் காரணமாகிறது. இன்னும் எத்தனை அதிகம் பேருடன் மக்கள் தொழுகையை நிறைவேற்றுகின்றார்களோ அல்லாஹ்விடத்தில் அது மிகவும் உகந்ததாகும். (அந்தளவு அல்லாஹ்வுடன் தொடர்பு வலுப்பெறும்) (ஆதாரம்: அபூ தாவூத்)

நுஸ்ரத் பின்த் இம்தியாஸ்,
ஆஇஷா ஸித்தீக்கா கலாபீடம், மாவனல்லை.

மௌனத்தின் பிரயோசனம்

- மௌனமாக இருப்பது சிரமம் இல்லாத வணக்கமாகும்.
- மௌனம் ஆட்சியற்ற கௌரவமாகும்.
- மௌனம் ஆபரணமற்ற அலங்காரமாகும்.
- மௌனம் சுவர்கள் அற்ற பாதுகாப்பாகும்.
- மௌனம் சங்கையான எழுத்தாளர்களுக்கு (மலக்குகள்) நிம்மதியாகும்.
- மௌனம் அறிஞனுக்கு அழகாகும், அறிவுக்குத் திரையாகும்.
- மௌனம் பிறரிடம் மன்னிப்புக் கேட்பதை தேவையற்று வைக்கும்.
- மௌனம் குறைகளை மறைக்கக் கூடியதாகும்.

ஆர். எப். ராஷிதா, தரம்: 11,
பாத்திமா ஸஹ்ரா ம.அ.க, ஓட்டமாவடி.

சிந்தனைக்கு துளிகள் சில!

- பகைவனின் பலத்துடன் உனது பலத்தை ஒப்பிட்டுப் பார். அதுவும் வெற்றிக்கு சிறந்த வழி!
- அறிவும் அனுபவமும் வயதை அடிப்படையாகக் கொண்டதல்ல!
- பெண் பெண்ணாக இருப்பது பெண்ணுக்கு அழகு!
- நான் என்ற நிலை மாறி, நாம் என்ற நிலையில் செயற்படுபவர்களுக்கு தோல்வியும் வெற்றிதான்!
- நல்ல நண்பர்களும் சூழலும் ஆலோசகர்களும் சாதிப்பதற்கு சாதகமானவை!
- தாயின் கவனயீனமும் தந்தையின் கண்டிப்பின்மையும் கூட பிள்ளைகள் வழிபிறழ வழிவகுக்கலாம்!
- பணிவுடன் நடப்பவர்கள் எல்லாம் பயந்தவர்களல்ல!
- நம்பு ஏற்றம் பெறுவாய்! கண்டவரை நம்பினால் சீரழிந்து போவாய்!

ஏ. பஸ்னா
பாத்திமா ஸஹ்றா அ.க., ஓட்டமாவடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா- விடை

1. ஆகாய விமானங்களின் வேகத்தை அளக்கும் கருவி எது? **டேக்கா மீட்டர்**
2. இன்சுலினைக் கண்டு பிடித்த விஞ்ஞானி யார்? **பாண்டிங்**
3. மனித உடலில் எத்தனை சத வீதம் நீர் உள்ளது? **70 %**
4. உலகம் உருண்டை வடிவம் என்று முதலில் நிரூபித்த விஞ்ஞானி யார்? **அரிஸ்டோட்டில்**

எச்.எம். பஸ்மிலா, தம்பாளை

உங்களுக்குத் தெரியுமா?

- எளிய மின்கலத்தை முதலில் அமைத்தவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்த அலெக்சாண்டர் வோல்ற்றா என்பவராவார்.
- மின் கலத்தின் முடிவிடங்கள் இரண்டுக் கிடையே காணப்படும் மின் அழுத்த வேறு பாட்டை அளக்கும் அலகான வோல்ற்று அலெக்சாண்டர் வோல்ற்றாவின் பெயரை நினைவாகக் கொண்டு இடப்பட்டதாகும்.
- உலர் மின் கலத்தில் காணப்படும் அமோனியம் குளோரைட்டு பசை நிலையில் காணப்படும்.
- இதனால் இவை கலத்திலிருந்து வெளியே கசிவதில்லை.
- இது உலர் மின் கலம் என அழைக்கப்பட்டா லும் அவை உலர்ந்ததாக காணப்படுவதில்லை.
- பல மின் கலங்களைத் தொடராக இணைத்து பற்றரி பெறப்படுகின்றது.
- ஈய அமிலச் சேமிப்புக்கலம் கி.பி. 1860ஆம் ஆண்டு கஸ்டன் பிளான்டே என்பவரால் உருவாக்கப்பட்டதாகும்.

-கந்தளாய் அன்ஸப்-

பொது அறிவு

- ஒரு தடவை கண் சிமிட்ட எடுக்கும் நேரம் எவ்வளவு? **0.3 வினாடி**
- ஞாபக சக்தியையும் புத்திக் கூர்மையையும் பாதிக்கும் நோய்? **அல்சைமர் (மறதி நோய்)**
- அதி கூடிய நாடுகளைக் கொண்ட கண்டம் எது? **ஆபிரிக்கா**
- சோமாலியா நாட்டின் ஜனாதிபதி யார்? **அப்துல்லாஹ் யூசுப்**
- நேபாளத்தின் பாராளுமன்றம் எது? **தேசிய பஞ்சாயத்து**
- இலங்கையில் தொலைத் தொடர்புத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது? **1982**
- முதலாவது தேசிய விளையாட்டு விழா நடைபெற்ற ஆண்டு? **1972**
- இலங்கையின் முதல் ஜனாதிபதி யார்? **வில்லியம் கொபல்லாவ**
- முதலாவது முஸ்லிம் சபாநாயகர் யார்? **எச்.எஸ். இஸ்மாயில்**
- சிங்கராஜ வனம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது? **இரத்தினபுரி, மாத்தறை, காலி மாவட்டங்களை உள்ளடக்கியதாக**
- மகாசேனன் கட்டிய குளங்களில் மிகப் பெரிய குளம் எது? **மின்னேரியா குளம்**
- இலங்கையில் ஆறுகள் இல்லாத ஒரே இடம் எது? **யாழ்ப்பாணம்**
- விண்வெளிப் பயண விதிகளை முதன் முதலில் வரையறை செய்த அறிஞர் யார்? **சேர். ஐசக் நியூட்டன்**
- விண்வெளியை முதன் முதலாக சுற்றி வந்த செயற்கைக் கோள் எது? **ஸ்புட்னிக் 1**
- பூமிக்கு அருகில் உள்ள நட்சத்திரக் கூட்டம் எது? **அன்றோ மீடா**
- பித்தம் இல்லாத முலையூட்டி எது? **எலி**
- வாயில் சுவை நரம்புகள் இல்லாத பிராணி எது? **திமிங்கிலம்**

எம்.ஐ.எம். இன்திகாப், அமீனிய்யா அ.க, நிகவெரட்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான விளக்கங்கள்

01. காலையில் எழுந்தவுடன் கற்பவை நன்றாக பதியக் கூடியதாக இருத்தல்.

நாம் தூக்கத்தில் இருக்கும்போது மூளைக் கலங்களில் காணப்படும் Co_2 போன்ற கழிவுப் பொருட்கள் அகற்றப்படுவதோடு, சுவாசத்தின்போது உருவாக்கப்படும் சக்தி ATP மூலக் கூறுகளில் அடைத்து சேமிக்கப் படுகிறது. எனவே, காலையில் எழுந்தவுடன் மூளைக்கலங்கள் உற்சாகத்துடன் இயங்குகின்றன.

02. கொதித்தாறிய நீர் சுவையற்றிருத்தல்

நீரைக் கொதிக்க வைக்கும்போது அதில் கரைந்துள்ள சில உப்புக்கள் நீக்கப்படுவதனால் சுவையற்றுப் போகிறது.

3. பிறந்த குழந்தையை அழச் செய்தல்.

பிறந்தவுடன் குழந்தையின் சுவாசப்பையின் இயக்கம் சீராக நடைபெற மாட்டாது. எனினும், குழந்தையை அழச்செய்யும் போது சுவாசப்பை சுருங்கித் தளர்ந்து சீர்திருத்தப்படுகிறது.

4. குப்பைகளை எரிக்கும்போது சாம்பர், கரித்துண்டு என்பன அதிக தூரம் பறத்தல்.

குப்பைகளை எரிக்கும்போது அதன் மேற்பரப்பிலுள்ள வளி விரிவடைந்து மேலே தூக்கிச் செல்லப்படுகின்றது.

5. பகல் நேரத்தில் கிணற்றில் பாசி பிடித்தல்.

கிணற்றில் உள்ள பாசி ஒளித்தொகுப்பில் வெளிவிடும் ஒட்சிசன் அதில் ஒட்டியிருக்கும். இதனால் பாசி மிதக்கும்.

6. நாய்கள் ஓடும்போது நாக்கை வெளியே தொங்க விட்டபடி ஓடும்.

நாய்க்கு வியர்வை நாக்கினாலேயே வெளிவிடப்படுகிறது. இதனால் நாய்கள் வியர்வையை வெளியேற்றுவதற்காக நாக்கைத் கொங்க விட்டு ஓடுகின்றன.

7. கரப்பான் பூச்சி, சிலந்தி போன்றவை உறங்கும் போது கண்களைத் திறந்து கொண்டே உறங்குகின்றன.

இக்குடும்பத்தை சேர்ந்த விலங்குகளுக்கு இமைகள் இல்லை. இதனால் இவை உறங்கும்போது கண்கள் திறந்தபடியே காணப்படுகின்றன.

8. சூடான நீரில் தேயிலையை ஊற வைத்து அருந்தினால் கசக்கின்றது.

தேயிலையை அதிக நேரம் ஊற வைக்கும் போது அதிலிருந்து 'தனின்' என்னும் ஒரு கசப்புப் பொருள் உருவாகின்றது. இதுவே கசப்பாக இருப்பதற்கு காரணம்.

எம். பாத்திமதுஸ் ஸஹ்றா
தரம்: 08,
அல்மனார் ம/க, மருதமுனை

சிந்திப்பதற்கு சில சிந்தனைத் துளிகள்

- காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. அதனால் காலத்தை வென்று ஞாலத்தில் உன் நாமம் பதி.
- முயற்சிக்கு என்றும் முதலிடம் கொடு. முயற்சிகள் உன் வாழ்வின் உயர்ச்சிக்கு மகுடமிடும்.
- நீ வாழ்க்கையை நேசிக்கிறாய? அப்படியானால் நேரத்தை வீணாக்காதே. ஏனெனில், வாழ்க்கை நேரத்தினால் உருவாக்கப்பட்டிருக்கிறது.
- சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்கு. சீரான வாழ்வு உன் காலடியில் சிரம் தாழ்த்தும்.
- வாழ்வினிலே நிதானத்தைக் கடைபிடி. அது தான் வாழ்க்கையின் முதற்படியாக அமையும்.
- அறிவுள்ளவனிடம் அறிவைப் பற்றிப் பேசு. அன்புள்ளவனிடம் அன்பைப் பற்றிப் பேசு. இவ்விரண்டும் இல்லாதவனிடம் எதைப் பற்றியும் பேசாதே!
- அதிக வாய்ப்பேச்சைக் காட்டிலும் அவனுடைய மௌனம் அதிக எண்ணங்களைப் பிரதிபலிக்கும்.
- எதிர்காலத்தைப் பற்றி பயப்படாதே. நிகழ்காலத்தில் ஒழுக்கத்துடன் இரு.
- நீங்கள் இன்று சிரிப்பது நாளை அழுவதற்குத் தான் என்றால், அதற்காக இன்று சிரிப்பதை நிறுத்தாதீர்கள், நாளை அழுவதை தடுப்பது எப்படி என்று யோசித்துக் கொண்டே சிரியுங்கள்.

எம்.ஏ. பாத்திமா ஜெஸ்லா
தரம்: 09, சம்/முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்
சம்மாந்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றல்-கற்பித்தல் துணைச் சாதனங்களும் அவற்றின் பயன்பாடுகளும்

பாடசாலைகளில் நடைபெறும் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் இன்று முன்னரிலும் பார்க்க வேறுபட்டுக் காணப்படுகின்றன. அவ்வேறுபாடுகளுக்கமைய தற்போதைய கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் கற்பித்தல் சாதனங்களின் பயன்பாடு முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகக் கருதப்படுகின்றது.

கற்றல் அனுபவங்களைப் பெறும் போது பிள்ளைகள் காதால் கேட்பதன் மூலம் 30% மான அறிவையும் கண்ணால் பார்ப்பதன் மூலம் 50% அறிவையும் கேட்டும் பார்த்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் 70% மான அறிவையும் பெற்றுக் கொள்கின்றனர்.

"நான் எதையும் செவிவழி கேட்டால் மறந்து விடுவேன்"

"கண்களால் பார்த்தால் ஞாபகத்தில் வைத்திருப்பேன்"

"செய்து பார்ப்பதன் மூலம் விளங்கிக் கொள்வேன்"

எனும் கருத்துக்களிலிருந்து புலன்களைத் தனித் தனியாகப் பயன்படுத்திப் பெறும் கற்றல் அனுபவங்களிலும் பார்க்க ஒரு சில புலன்களின் ஒன்றிணைப்பினால் கூடிய பயனுள்ளதும் நிலையானதுமான அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். கற்றல் சாதனங்களைப் பயன்படுத்துவதன் மூலமே ஒன்றுக்கு மேற்பட்ட புலனுறுப்புக்களை ஒன்றிணைத்து வழங்க முடியும் என்பது ஆய்வுகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட உண்மையாகும்.

கற்றல் கற்பித்தல் துணைச் சாதனங்களை வகுப்பறைக் கற்பித்தல் துணைச் சாதனங்கள், புறச்சாதனங்கள் என இரு வகையாகப் பிரிக்கலாம்.

வகுப்பறைக் கற்பித்தல் சாதனங்களுள்,

1. கட்புலச் சாதனங்கள்
2. செவிப்புலச் சாதனங்கள்
3. கட்புல செவிப்புலச் சாதனங்கள்
4. மாதிரியுருக்கள்
5. காட்சிப்படுத்தல்கள் அல்லது செய்து காட்டல்கள் என்பவை அடங்குகின்றன.

புறச்சாதனங்களுள் நிஜவாழ்க்கை அனுபவங்களான,

1. நாடக பாணி அனுபவங்கள்
2. இயல்பான நாடகங்கள்
3. நாடகங்கள்
4. வெளிக்கள ஆய்வுகள்
5. கல்விச் சுற்றுலாக்கள்

என்பவை அடங்குகின்றன. எனவே, கற்பித்தல்-கற்றல் சாதனங்களை, மாணவர்களின் முதிர்ச்சி, அறிவு மட்டம், தேவை என்பவற்றை உணர்ந்து பயன்படுத்துவதன் மூலம் நாம் பின்வரும் பயன்களைப் பெற முடியும்:

1. கற்பித்தல் வேகமடையும்.
2. மாணவரை ஊக்குவித்து அவர்களின் கவனத்தை ஈர்க்கலாம்.
3. மாணவரைச் செயலூக்கத்துடன் இயக்கச் செய்யலாம்.
4. சிக்கலான எண்ணக்கருக்களை இலகுவில் விளக்கலாம்.
5. மாணவர் புத்தூக்கத்துடன் பாடங்களைக் கற்பர்.
6. கற்றல் ஒரு விருப்புக்குரிய செயலாக மாறும்.
7. சொற்களின் மூலம் பெறும் விளக்கத்தை விட ஆழமான விளக்கம் ஏற்படும்.
8. மொழித்திறன், சொல் வளம், பேச்சுத்திறன் ஆகியவை விருத்தியடையும்.
9. ஆசிரியர்-மாணவர் தொடர்பு விருத்தியடையும்.
10. நேரத்தை சிக்கனமாகச் செலவிட வழியேற்படும்.
11. மாணவர்களின் வேறுபட்ட தன்மைகளுக்குப் பொருந்தும்.

எனவே, நமது பாடசாலைகளில் எளிதாகவும் பரவலாகவும் பயன்படுத்தக்கூடிய சாதனங்களைத் தெரிவு செய்து பயன்படுத்தல் பயனுடையதாகும். பெரும்பாலும் ஆரம்பக் கல்வியை பெறும் மாணவர்களுக்கு துணைச் சாதனங்களைப் பயன்படுத்தி அனுபவங்களை வழங்குவதன் மூலம் எமது நோக்கங்களை இலகுவாக நிறைவு செய்து கொள்ள முடியும்.

ஏ.டபிள்யு. முஹம்மத்
சிறாஜ் அரபுக் கல்லூரி, ஓட்டமாவடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட வாழ்வில் அரபு மொழி

اللغة العربية

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

சென்ற இதழ் தொடர்...

لَكِنَّ

என்றாலும்

اَلْمَدْرَسَةُ قَدِيْمَةٌ لَكِنَّ أَسَاتِذَتَهَا جُدُدٌ பாடசாலை பழையது என்றாலும் அதன் ஆசிரியர்கள் புதியவர்கள்.

لَعِبْنَا كُرَةَ الْقَدَمِ وَلَكِنَّ مُحَمَّداً لَمْ يَلْعَبْ

நாம் கால்பந்து விளையாடினோம் என்றாலும் முஹம்மத் விளையாடவில்லை.

لَعَلَّ

لَعَلَّ السَّمَاءَ تُمْطِرُ மழை பெய்யலாம்.

لَعَلَّ الشَّابَّ يَذْهَبُ إِلَى الْمَكْتَبَةِ இளைஞன் நூலகத்துக்குப் போகலாம்.

لَيْتَ

لَيْتَ هَذَا الشَّابَّ وَزِيْرٌ இந்த இளைஞன் ஓர் அமைச்சராக இருக்கக் கூடாதா!

لَيْتَ الْجَوَّ بَارِدٌ காலநிலை குளிரானதாக இருக்கக் கூடாதா!

لَيْتَ هَذِهِ الْمَرْأَةَ مُسْلِمَةٌ இந்தப் பெண்மணி முஸ்லிமாக இருக்கக் கூடாதா!

பிரதிப் பெயர்களுடன் இச்சொற்கள் இணைந்து வரலாம்

إِنَّهُ

إِنَّ + هُوَ طَالِبٌ

إِنَّهُ طَالِبٌ அவன் ஒரு மாணவன்.

أَنَا طَبِيْبٌ

إِنَّ + أَنَا طَبِيْبٌ

إِنَّنِي طَبِيْبٌ நிச்சயமாக நான் ஒரு வைத்தியன்.

إِنَّ + أَنْتَ تَاجِرٌ

إِنَّكَ تَاجِرٌ நிச்சயமாக நீ ஒரு வியாபாரி.

نَحْنُ شَبَابٌ

إِنَّنَا شَبَابٌ நிச்சயமாக நாம் இளைஞர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

كَانَ وَأَخَوَاتُهَا

كَانَ வும் அது சார்ந்த வினைச் சொற்களும்

* இவை اَلْمُبْتَدَأُ وَالْخَبَرُ வாக்கியங்களில் இணைந்து மாற்றத்தை ஏற்படுத்தும் வினைச் சொற்களாகும். வாக்கியத்தில் இணைந்து வரும் வினைச் சொற்களுக்கு வினைக் கர்த்தா/ எழுவாய் அவசியமாகும். ஆனால் இவ்வகை வினைச் சொற்களுக்கு வினைக் கர்த்தா அவசியமில்லை. இவ்வினைகள் பெயர்ச்சொல் வாக்கியங்களில் மட்டும் இணைந்து வரும் اَلْأَفْعَالُ النَّاقِصَةُ குறைபாடான வினைகள் எனவும் இவை அழைக்கப்படுவதுண்டு.

மாறினான்	صَارَ	இருந்தான்	كَانَ
மாலையிலானான்	أَمْسَى	காலையிலானான்	أَصْبَحَ
இரவிலானான்	بَاتَ	தொடர்ந்து இருந்தான்	ظَلَّ
இல்லை	لَيْسَ		

இவ்வகை வினைச்சொற்கள் اَلْمُبْتَدَأُ وَالْخَبَرُ வாக்கியத்திற்கு முன்னால் வந்தால் خَبَرٌ க்கு نَصْبٌ செய்யும். சில வசனங்களில் نَصْبٌ உடைய நிலை தெளிவாகவும் மற்றும் சில வசனங்களில் மறைந்தும் காணப்படும். نَصْبٌ உடைய நிலை தெளிவாக அமையப்பெற்ற வசனங்களை நோக்குவோம்.

முஹம்மத் ஒரு மாணவன். — مُحَمَّدٌ طَالِبٌ

முஹம்மத் மாணவனாக இருந்தான். — كَانَ مُحَمَّدٌ طَالِبًا ⟵ (خَبَرٌ)

பாத்திமா ஒரு மாணவி. — فَاطِمَةُ طَالِبَةٌ

பாத்திமா மாணவியாக இருந்தாள். — كَانَتْ فَاطِمَةُ طَالِبَةً

நான் ஓர் ஆசிரியர். — أَنَا مُدَرِّسٌ

நான் ஓர் ஆசிரியராக இருந்தேன். — كُنْتُ مُدَرِّسًا

நான் ஓர் ஆசிரியை. — أَنَا مُدَرِّسَةٌ

நான் ஓர் ஆசிரியையாக இருந்தேன். — كُنْتُ مُدَرِّسَةً

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I learn every day

Assalamu alaikum dear friends!

I thought of giving you some writing practice this month. Writing, is an important step in learning a language. I believe that all of you are good writers in your mother toung! Well, writing in English is going to be easier for you.

Ok, to write, you must have the stuff. "What can I write?". As students we write to please our teachers. But when you enter universities, you'll be writing to help yourselves and that too in English!

- Fine, to get the stuff, a great amount of reading is required. Read, you'll find the topic you want. Once you choose the topic, you should develop the subject.
- You can surf the net, read again, and this time, you'll be reading on the specific topic visiting libraries.
- Better to maintain a notebook to jot down the main points you collect.
- Finally you order your points, add your own views , add interesting pieces related to it and complete your writing.

PUBLIC LIBRARY
JAFFNA

This was on writing an essay.
Write on the topic, **"The hero in my life"**

....
....
....
....
....
....
....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Friends, try writing and get it published in the internet. Try to find out what people say about your ideas.

Later send them to magazines, and of course we are ready to accept your own creations.

Another important point,

Avoid grammatical errors. If you are typing, your grammar will be checked automatically. If not, you'll have to get the help of your English teacher.

Here are some writers! I've chosen my favourite writer this time. He is A.M .Sathath, from Potuvil, who wrote on a visit to zoo.

I visit the zoo

Recently my parents took me and my sister to the zoo. We bought the tickets at the entrance and went inside. First we saw the ostrich. My sister was so excited. Then we went to the aquarium. We saw the large fish displayed in the aquarium. Next we went to see the reptiles. My sister was scared, but my mother said that since they are inside glass enclosures they cannot do any harm to anyone of us. We also went to the birds and butterflies' section. There were variety of butterflies and they were drinking nectar from the flowers. We saw the big cats tigers and lions. We spent quite sometime looking at the lions who were moving about very fast. But their cages were too small for them. We saw bears too. By the time we finished watching the animals, we were tired. We had a tea, and went to the elephants show. It was so nice. Every one enjoyed the elephant dance. Finally we saw the zebras. I was sad that there weren't any penguins at the zoo. Then we came back ending a beautiful afternoon.

A.M. Sathath
Grade 09
AK/Al/Hamra Maha Vidyalaya, Oluvil

Flowers

Flowers have been important to man since ancient times. People love to grow flowering plants in their home gardens. Botanical gardens like Peradeniya and Haggala have a wide variety of flowers. Natural forests like sinharaja are also abundant in beautiful flowers.

Flowers have a fragrance and they beautify the environment. They appeal to everyone. They brighten every occasion of our lives. We use flowers to express our feelings. They are also used in religious activities. People use them for decorations. Today flowers are an important source of income.

Fathima Sumaiya Haris
Gr-09, Al-Aqsa M.V, Watadeniya, Gampola

Entries by mail

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A heart touching story



A man reached 70 years of age and he faced a disease; he could not urinate. The doctors informed him that he was in need of an operation to cure this disease. He agreed to have the operation done as the problem was giving him much pain for days. When the operation was completed, his doctor gave him the bill which covered all the costs. The old man looked at the bill and started to cry. Upon seeing this ,the doctor told him that if the cost was too high then they could make some other arrangements. The old man said **"I am not crying because of the money but I am crying because Allah let me urinate for 70 years and He never sent me a bill."**

> **...and if you try to count the blessings of Allah, never will you be able to count them...** (Surah Ibrahim)

Found by:

SAJEENA BEGUM YUNAITHEEN,GRADE 11, AL IRFAN LADIES COLLEGE,POTTUVIL.

Value of reading

Reading gives a person a deep knowledge about various subjects. Normally people read for pleasure during leisure. Some make it as a hobby. An avid reader is a well versed person. There are so many things to read such as newspaper articles, novels, short stories, magazines, periodicals, biographies and so on. However, one must know what to read and what not to read.

Reading is a good mental exercise which develops our brain and mental power. We need to know the particular language. Reading also improves our language skills such as our vocabulary and understanding of idiomatic expressions. Some of our ancient people could not read by themselves, so they used to go to places like temples where Jathaka stories were read by the Buddhist monks in the presence of an audience. It is said that 'Reading maketh a full man' because people can acquire a lot of knowledge by reading. I love to read story books.

Najimudeen Mohamed Sukki

Grade 9, KM/ Al Misbah Maha Vidyalaya, kalmunai

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

I learn every day

A 61/5,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு 10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

10ம் தரம்

சரியான விடையின் கீழ் கீறிடுக

1. விஜயனும் குழுவினர்களும் இலங்கைக்கு எங்கிருந்து வந்தார்கள்?

I. பாருகச்ச II. பாண்டி நாடு
III. வட நாடு IV. பர்மா

2. விஜயன் எந்த நகரை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான்?

I. மாந்தை II. தம்பபண்ணி
III. அனுராதபுரம் IV. ஜம்புகோளப் பட்டினம்

3. கேத்திர கணிதமுறையில் அமைந்த கல்லாயுதங்களைப் பயன்படுத்திய மனிதர் யார்?

I. பலாங்கொடை மனிதன்
II. பொலன்னறுவை மனிதன்
III. கோகர்ண மனிதன் IV. கதரகம மனிதன்

4. குப்தர் காலத்திற்குரிய சித்திரங்கள் அமைந்த குகைகள் எங்கு காணப்பட்டன?

I. கிதுல்கல, பட்டஎதாம்பன
II. ஆண்டிக, அஜந்தா III. எல்லோரா, ஆண்டிக
IV. அஜந்தா, எல்லோரா

5. குப்தர் காலத்தில் 'புக்தி' என்ற பெயரால் அழைக்கப்பட்டது எது?

I. வரிமுறை II. நீதிமன்றங்கள்
III. பிரதேச நிருவாக அலகு
IV. அமைச்சர் சபை

6. A. இரண்டாம் சந்திர குப்தன் B. குமார குப்தன் C. முதலாம் சந்திர குப்தன் D. சமுத்திர குப்தன்

குப்தர் காலத்தில் ஆட்சி செய்த மன்னர்கள் மேலே தரப்பட்டுள்ளவர்களை கால ஒழுங்கின்படி வரிசைப்படுத்தினால் அமையும் சரியான ஒழுங்கு.

I. CABD II. CDAB III.CDBA IV. CADB

7. அருகிலுள்ள படத்தில் யாருடைய உருவம் அமைந்துள்ளது?

I. பார்வதி
II. சிவன்
III. விஷ்ணு IV. காதலர் சோடி

8. மௌரிய பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்பு இந்தியாவின் வடமேற்கில் யாருடைய ஆட்சி ஏற்பட்டது?

I. குஷாணர் II. சீனர்
III. மொங்கோலியர் IV. அரேபியர்

9. அருகிலுள்ள உருவம் பற்றிய சரியான தகவல்

I. சிந்துவெளி மனிதன்
II. வேடர்
III. செவ்விந்தியர்
IV. குதிரை முக மனிதன்

10. பலாங்கொடை மனிதன் உணவாகக் கொண்ட ஓர் உயிரினம்

I. குரங்கு II. நாய் III. பூனை IV. காட்டுக் கோழி

11. A. அரசனாகி 13ஆம் ஆண்டில் கலிங்கப்போர் ஏற்பட்டது.

B. அவன் இரண்டாவது பௌத்த மகாநாட்டைக் கூட்டினான்.

C. சமயத் தூதுவர்களை 9 நாடுகளுக்கு அனுப்பினான்.

D. பிந்துசாரனுக்குப் பின் அசோகன் ஆட்சிக்கு வந்தான்.

மேற்குறிப்பிட்ட தகவல்களுள் அசோகன் பற்றிய பிழையான தகவல் எது?

I. A II. B III. C IV. D

இலங்கையின் ஆவணப்படுத்தப்பட்ட வரலாறு ஆரம்பமாகும் காலம்.

I. கி.மு 6ஆம் நூற்றாண்டு
II. கி.மு 8ஆம் நூற்றாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III. கி.மு 4ஆம் நூற்றாண்டு
IV. கி.பி 6ஆம் நூற்றாண்டு

13. இலங்கையில் மேற்குப் பக்கத்தில் காணப்படும் ஒரு நதி.

I. மல்வத்து ஓயா II. மாணிக்க கங்கை
III. கல்யாணி நதி IV. கும்புக்கன் ஓயா

14. எந்த மன்னனைத் தோற்கடித்து எல்லாளன் ஆட்சிக்கு வந்தான்?

I. அசேலன் II. வட்ட காமினி
III. வசபன் IV. 4ஆம் மகிந்தன்

15. யாரைத் தோற்கடித்து வட்ட காமினி ஆட்சிக்கு வந்தான்?

I. சத்தாதிஸ்ஸ II. மகாரத்தக்க
III. அரிட்டன் IV. 5ம் மகிந்தன்

16. அனுராதபுரத்தின் இறுதி மன்னன்

I. எல்லாளன் II. 7ஆம் புவனேகபாகு
III. 5ஆம் மகிந்தன் IV. 6ஆம் மகிந்தன்

17. ஜனநாத புரம் என்று எந்த நகரம் அழைக்கப் பட்டது?

I. அனுராதபுரம் II. சிகிரியா
III. விஜிதபுர IV. பொலன்னறுவை

18. ஜோத எல உன்ற ஜயகங்கையை அமைத்த மன்னன்.

I. காசியப்பன் II. வசபன்
III. மகா சேனன் IV. தாது சேனன்

19. கிரித்தல வாவியை அமைத்தவன்.

I. 2ம் அக்போ II. 1ம் அக்போ
II. வசபன் IV. மகா சேனன்

20. பின்வரும் அரசர்களுள் பொலன்னறுவையை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த மன்னன்.

I. 5ம் அக்போ II. எல்லாளன்
III. நிசங்க மல்லன் IV. துட்ட கைமுனு

11ம் தரம்

1. 1802, 1818 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற வரலாற்றுச் சம்பவங்கள் முறையே.

I. இரட்டை ஆட்சி ஆரம்பம், மியூறன் குழு வந்தமை

II. இரட்டை ஆட்சி முடிந்தமை, ஆளுனர் பிறவுண்றிக் நியமனம்

III. இரட்டை ஆட்சி முடிந்தமை, ஆங்கிலேயர் கண்டி ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டமை

IV. இரட்டை ஆட்சி முடிந்தமை, ஆங்கிலேயர் கண்டியில் தமது ஆட்சியை உறுதிப்படுத்தி யமை

2. 'ஆழம் அறியாமல் காலை விட்டதைப் போல' என்ற பழமொழிக்கு உதாரணமாக அமைந்த ஆளுனர்.

I. நோத் II. மெயிற்லண்ட்
III. பிறவுண்றிக் IV. மனிங்

3. கண்டி ஒப்பந்தத்தில் இடம்பெற்ற வாசகங்களின் எண்ணிக்கை.

I. 11 II. 12 III. 13 IV. 15

4. 1818 கிளர்ச்சிக்கு காரணமாகாத ஒரு விடயம்.

I. பாழ்நிலச் சட்டம்
II. கடவை வரி செலுத்த வேண்டி இருந்தமை
III. வீதி அமைக்க அனுமதி மறுத்தமை
IV. கரையோர கிளர்ச்சிக்கு உதவாமை

5.

நிரல் I	நிரல் II
1. 1912	A. டொனமூர்
2. 1921	B. குறூமக்காலம்
3. 1924	C. மனிங் டிவண்ஷயர்
4. 1931	D. மனிங்

நிரல் Iக்கு ஏற்ப நிரல் II ஐ ஒழுங்குபடுத்தினால் சரியாக அமையும் ஒழுங்கு

I. B C A D II. CABD III. BDCA IV. BCDA

6. நீலப் புத்தகம் என்பது

I. சனத்தொகை புள்ளிவிபரம்
II. மியூறன் குழு அறிக்கை III. 1818 பிரகடனம்
IV. தேயிலை ஏற்றுமதி அறிக்கை

7. குடாபொல பிக்கு, கொங்காலே கொட பண்டா, வீரபுரன் அப்பு இம் மூவருடனும் தொடர்புடைய விடயம்.

I. 1797 கிளர்ச்சி II. 1818 கிளர்ச்சி
III. 1848 கிளர்ச்சி IV. கண்டி ஒப்பந்தத்தில் ஒப்பமிட்ட பிரதானிகள்.

8. குறூமக்கலம் யாப்பில் உத்தியோக சார்பற் றோரின் எண்ணிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

II. 11 II. 10 III. 37 IV. 42

9. 1921இல் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டோரின் எண்ணிக்கை.

I. 4 II. 6 III. 16 IV. 18

10. டொனமூர் யாப்பு அரசுக் கழகத்தில் இடம்பெற்றோரின் எண்ணிக்கை.

I. 50 II. 61 III. 49 IV. 101

11. அருகிலுள்ள படத்தில் காணப்படும் உருவம் எது?

I. கொரவக்கல்
II. பார்வதி சிலை
III. காவற்கல்
IV. குதிரைமுக மனிதன்

12. கொழும்பு மாநகர சபை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு.

I. 1865 II. 1866 III. 1867 IV. 1868

13. எட்வட் பாண்ஸ் கன்னொறுவாவில் கோப்பித் தோட்டத்தை ஆரம்பித்த ஆண்டு.

I. 1921 II. 1922 III. 1923 IV. 1924

14. அருகிலுள்ள சமயத்தலம் அமைந்துள்ள இடம்.



I. மடு
II. திருகோணமலை
III. நல்லூர்
IV. முன்னேஸ்வரம்

15. பல்பயிர் யுகத்தில் வளர்க்கப்பட்ட ஒரு பயிர்.

I. சிங்கோனா II. மிளகு II. கறுவா IV. ஏலம்

16.

நிரல் I	நிரல் II
1. தேயிலை	A. களுத்துறை
2. இறப்பர்	B. அம்பாறை
3. தென்னை	C. நுவரெலியா
4. நெல்	D. குருணாகல

நிரல் I இல் பயிர்களும் நிரல் II இல் அப்பயிர் வளரும் முக்கிய மாவட்டங்களும் உள்ளன. நிரல் Iக்கு எற்ப நிரல் IIஐ ஒழுங்குபடுத்தினால் அமையும் சரியான ஒழுங்கு.

I. BACD II. DCBA III. DABC IV. CADB

17. தோட்டத் தொழிலாளர்களின் முதலாவது தலைவராக அமைந்தவர்.

I. ஏ.ஈ. குணசிங்க II. எஸ். தொண்டமான்
III. செல்வநாயகம் IV. நடேச ஐயர்

18. இலங்கையில் நடைபெற்ற முதலாவது தொழிலாளர் வேலை நிறுத்தம்.

I. தள்ளு வண்டில் தொழிலாளர் வேலை நிறுத்தம்
II. நெசவுத் தொழிலாளர் வேலை நிறுத்தம்
III. சலவைத் தொழிலாளர் வேலை நிறுத்தம்
IV. அச்சகத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

19. அருகில் உள்ள படைப்பின் பெயர்.



I. காவற்கல்
II. சந்திரவட்டக்கல்
III. கொரவக்கல்
IV. சமாதிக்கல்

20. இது எந்தக் கலையோடு தொடர்புடையது?

I. சிற்பக்கலை II. செதுக்கற்கலை
III. கட்டடக்கலை IV. ஓவியக்கலை

வரலாறு - விடைகள்

தரம் 10		தரம் - 11	
1 -	3	1-	4
11 -	2	11-	3
2-	2	2-	1
12-	1	12-	1
3-	1	3-	2
13-	3	13-	4
4-	4	4-	1
14-	1	14-	3
5-	3	5-	3
15-	2	15-	1
6-	2	6-	1
16-	3	16-	4
7-	4	7-	3
17-	4	17-	4
8-	1	8-	2
18-	4	18-	4
9-	4	9-	3
19-	1	19-	3
10-	1	10-	2
20-	3	20-	2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களை வெல்லுங்கள்

ஜே.எம். அஸீம் (நளீமி)

ஏப்ரல் என்றாலே பாடசாலை மாணவர்களுக்கு உற்சாகமும் சந்தோஷமும் ஊற்றெடுக்கும். அந்த விடுமுறையில் எவ்வாறு உல்லாசமாகத் திரியலாம் என்றுதான் சிந்திப்பார்கள். சுற்றுலாக்கள் அதிகம் நடைபெறும் மாதங்களில் ஒன்றுதான் ஏப்ரல். விடுமுறை என்றால் பலருக்கும் பலவிதமான எண்ணங்கள் வரும். வீட்டு வேலைகளைச் செய்யலாம், வீட்டுத் தோட்டத்தை இன்னும் அழகாக்கலாம், நண்பர்களோடு கூடி விளையாடலாம் என்றுதான் எண்ணச் சிறகுகள் விரியும். சிலபோது ஓய்வு அதிகரித்து தூக்கம் மிகைத்து விடுவதும் உண்டு. மட்டுமல்ல விடுமுறையை, ஓய்வை என்ன செய்வதென்று தெரியாமல் வீணாகக் கழித்து விடுபவர்களும் உண்டு.

ஓய்வு மிகப் பெரும் அருள். அதனால்தான் வேலைக்கு முன் ஓய்வைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு இஸ்லாம் கற்றுத் தருகிறது. ஓய்வுப் பொழுதுகளில் பழைய பத்திரிகை ஓரங்களில் கிறுக்கி விளையாடியவர்கள்தான் மிகப் பெரும் எழுத்தாளர்களானார்கள். ஓய்வில் அப்பிள் மரத்தின் கீழ் இருந்து இதமாக, ஆழமாகச் சிந்தித்த ஐசக் நியுட்டன்தான் புவியீர்ப்பு விதியைக் கண்டுபிடித்தார். ஓய்வின் நிழலில் அமர்ந்து புத்தகங்களை வாசித்த ஆபிரகாம் லிங்கன்தான் அமெரிக்காவின் கறுப்பின அடிமையை ஒழித்த உலகம் போற்றும் தலைவரானார். பொழுதுகளை ஓய்வாக்கி ஆராய்ச்சி செய்த எடிசன்தான் ஆயிரக் கணக்கான கண்டுபிடிப்புகளின் சொந்தக் காரனானார். எனவே, ஓய்வு வீணாகக் கழிப்பதற்கல்ல.

விடுமுறை உங்களை வளர்ப்பதற்கே!

பள்ளிக் காலங்களில் விடுமுறை என்பது பாடசாலை லீவு நாட்கள் அனைத்துமே அடங்கும்; சனி, ஞாயிறு விடுமுறை, விஷேட தினங்களுக்கான விடுமுறை, தவணை விடுமுறை, ஆண்டிறுதி விடுமுறை அடங்கலாக. க.பொ.த (சா/த)க்கும் க.பொ.த (உ/த)க்கும் இடைப்பட்ட பகுதி உண்மையில் பல்வேறு பயன்பாட்டிற்குரிய காலமாகக் காணப்பட்ட போதிலும் அதனையும் விடுமுறையாகக் கருதலாம். மாணவர்களில் பலருக்கு அந்தப் பள்ளிக் கால விடுமுறையை எவ்வாறு பயனுள்ளதாகவும் சுவாரஷ்யமானதாகவும் இன்பமளிப்பதாகவும் உல்லாசமாகவும் தம்மை வளர்த்துக் கொள்ளக் கூடியதாகவும் கழிப்பது என்பது தெரியாதுள்ளது.



கூழாங்கற்களும் வைரக்கற்களும்

ஒருநாள் இரவு ஒரு நாடோடிக் கூட்டத்தினர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது திடீரென பிரகாசமான வெளிச்சம் அவர்களைச் சூழ்ந்து கொண்டது. ஆச்சரியமடைந்த அவர்கள் சற்றுப் பயந்தும் போயினர். அதிலிருந்து ஓர் அசரீரி காதைப் பிளந்தது.

"நீங்கள் ஒவ்வொருவரும் உங்களால் முடிந்தளவு கூழாங்கற்களை சேகரித்து உங்கள் பைகளில் நிறைத்துக் கொள்ளுங்கள். நாளை முழுவதும் பயணம் செய்யுங்கள். நாளை இரவு நீங்கள் சந்தோஷமடைவீர்கள். அதேநேரம் வருத்தமும் அடைவீர்கள்."

வெளிச்சமும் அசரீரியும் மறைந்தது. தங்களுக்கு பெரியதொரு நல்லவோ கெடுதியோ நிகழப் போகின்றது என நினைத்த அவர்களுக்கு எந்தக் கெடுதியும் நிகழவில்லை. மாறாக எந்த நற்செய்தியும் கிடைக்கப் பெறவில்லை. இதனால் கவலையும் ஏமாற்றமும் அடைந்தனர்.

கடமைக்காக சில கூழாங்கற்களைப் பொறுக் கிக் கொண்டனர். மறுநாள் முழுவதும் பயணம் செய்து மற்றோர் இடத்தை அடைந்தனர். கூடாரமடித்துத் தங்கினர். எதேச்சையாக அவர்கள் தமது பைகளைப் பார்த்தபோது அவர்கள் சேகரித்த ஓரிரண்டு கூழாங்கற்கள் வைரக்கற்களாக மாறியிருந்தன. ஆச்சரியமும் கவலையும் அவர்களை ஆட்கொண்டது. கற்கள் வைரமாகும் என்று தெரிந்திருந்தால் சுமக்க முடியாதளவு கூழாங்கற்களையும் சிரமப்பட்டு சுமந்திருக்கலாமே என்று கைசேதப்பட்டனர்.

இது ஓர் உருவகக் கதை. ஆனால், இதில் பெரிய யதார்த்தம் தத்ரூபமாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நீங்கள் கற்றுக் கொள்ளும் பல விடயங்கள் உங்களுக்குக் கூழாங்கற்களே! அவை வைரமாக ஜொலிக்கும் வரை அவற்றின் பெறுமதியை நீங்கள் அறிவதில்லை.

"உங்களுக்கு கூழாங்கற்களாகத் தோன்றுபவற்றை முடிந்தளவு சேகரித்துக் கொள்ளுங்கள். எதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் அவை வைரக்கற்களாக மாறலாம்."

-ஜோன் வைன் ஷ்லேட்டர்-

உங்கள் பாடசாலை கற்றல், விளையாட்டு, இணைப் பாட விதான செயற்பாடுகள் சிலபோது உங்களுக்கு கூழாங்கற்களாகத் தெரியலாம்; வேம்பாய்க் கசக்க லாம். ஆனால், அவை பயனளிக்கும் போதுதான் அவற்றில் வைரங்களைக் காண்பீர்கள். விடுமுறையில் உடனே பலனளிக்காத பல்வேறு கூழாங்கற்களை உங்களால் பொறுக்கி சேகரித்து சேமித்து உங்களை வளப்படுத்திக் கொள்ள முடியும்.

பயனுள்ள நூற்களை வாசிக்கலாம்; கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் எழுதலாம்; உடற் பயிற்சி செய்யலாம்; பேச்சுத் திறனை வளர்க்கலாம்; ஓவியம் வரையக் கற்றுக் கொள்ளலாம். அது மட்டுமல்ல கணினி, தொழிநுட்ப அறிவை விருத்தி செய்யலாம்; பிறருக்கு உதவி செய்யலாம். தாய்க்கு சமையலில் உதவி செய்யலாம். வீட்டை சுத்தமாக வைத்திருக்கலாம். பூக்கன்றுகளை நடலாம்.

இவற்றையெல்லாம்விட முக்கியமானதுதான் உங்களை நீங்கள் வெல்வது. உங்களை நீங்கள் வெல்வது என்றால் என்ன? உங்களிடம் நீங்கள் தோற்பதென் றால் என்ன என்பதை விளக்குவதன் மூலம் உங்களை நீங்கள் வெல்வது என்றால் என்ன என்று விளக்கலாம். உங்களிடம் நீங்கள் தோற்பது என்றால், நீங்கள் ஒரு விடயத்தை செய்ய நினைத்து அல்லது செய்ய வேண் டிய தேவை ஏற்பட்டு செய்யாமல் விடுவது அல்லது செய்ய முடியாமற் போவது.

உதாரணமாக, நீங்கள் அதிகாலையில் எழுந்தி ருக்க வேண்டும் என நினைக்கிறீர்கள். ஆனால் உங்களால் கடைசிவரை அது முடியாமலேயே இருக் கிறது என்றால் உங்களிடம் நீங்கள் தோற்றுவிட்டீர்கள். உங்கள் தூக்கத்தை உங்களால் வெல்ல முடியாதபோது உங்களிடம் நீங்கள் தோற்றுவிட்டீர்கள். உங்களை சோம்பேறித்தனமும் பொடுபோக்குத்தனமும் மிகைக் கின்றபோது நீங்கள் தோல்வியடைந்து விட்டீர்கள். அலட்சியமாக செயற்படுவதால் உங்கள் இலட்சி யங்கள் தொலைந்து போகின்றன.

உங்கள் முதல் எதிரி

சோம்பேறித்தனமும் தூக்கமும் உங்கள் முதல் எதிரி. அதிகாலையில் எழுவது ஆரோக்கியத்தின் அடிப்படை; உற்சாகமாய் இருப்பது செயற்பாடு களின் அடிப்படை. எனவே, உற்சாகமாய் செயற் படுங்கள். எனவேதான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சோம்பேறித்த னத்திலிருந்தும் பொடுபோக்கிலிருந்தும் பாதுகாப்புத் தேடுமாறு கற்றுத் தந்தார்கள். "தூக்கம் வரவில் லையானால் கட்டிலில் புரண்டு கொண்டிருக்கா தீர்கள். எழுந்து சென்று ஏதாவது செய்யுங்கள் என் றார்" சுயமுன்னேற்றவியலாளரான டேல் கார்னகி.

தயக்கம் உங்கள் மற்றொரு எதிரி. தன்னம்பிக்கை யோடு எதுவும் உங்களால் முடியும் எனப் பணியாற் றுங்கள். புதிய புதிய முயற்சிகளில் ஈடுபடுங்கள். வெற்றி தோல்வியைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்பவர்களாக இருக்காமல் முயற்சியாளராய் இருங்கள்.

உங்களை வெல்வது எப்படி?

வெற்றி என்பது இலகுவாகக் கிடைக்கக்கூடிய ஒன்றல்ல என்பதையும் கடின உழைப்பும் நீண்ட, தொடர்ச்சியான முயற்சியும் தேவையான ஒன்று என்பதையும் மனதில் இருத்துங்கள். உங்களை நீங்கள் வெல்வதற்கு உங்கள் மனதை ஒருமுகப் படுத்த வேண்டும். சிந்தனையைத் தெளிவுபடுத்த வேண்டும். இலட்சியங்களை வகுத்துக் கொள்ள வேண்டும். இலக்குகளை நிர்ணயித்து திட்டமிட வேண்டும். தடைகளை அடையாளம் கண்டு தகர்த் தெறிய வேண்டும்.

உங்கள் பலவீனம் என்ன?

பலவீனமான முஃமினை விட பலமான முஃமின் சிறந்தவன்.

உங்கள் பலவீனம் என்ன என்ற கேள்விக்கு பதிலளிப்பது இலகுவானது. ஆனால் நீங்கள் ஒரு நேர்முகத் தேர்வுக்கு சென்று இந்தக் கேள்வியைக் கேட்டால் நீங்கள் எப்படிப் பதிலளிப்பீர்கள் என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். உதாரணமாக உரிய நேரத்திற்கு (Punctuality) உங்களால் செயற்பட முடியாது உள்ளது என்றால் எப்படி அதனை நேர்முகத் தேர்வில் சொல்வீர்கள்? நேரத்திற்கு செயற்பட முடியாத உங்களை அவர்கள் வேலைக்கு அமர்த்தினால் அவர்களது செயற்பாடு பாதிக்கப்படு மல்லவா? எனவே, சற்று சிந்தித்துப் பாருங்கள். அவ்வாறானதொரு பலவீனம் உங்களிடமிருந்தால் அதனை எவ்வாறு அகற்றலாம் என சிந்தித்து முயற்சித்துப் பாருங்கள்.

ஆற்றல்களை வளர்ப்பது (Skills Development)

உங்களை வெல்வதற்கு சிறந்த வழிதான் உங்கள் உள்ளார்ந்த ஆற்றல்களை வளர்ப்பது. இன்று பிரதா னப்படுத்தி பேசப்படும் மென்திறன்களை நீங்கள் வளர்ப்பது உங்களை வெற்றி கொள்ள உதவும். திறமைமிக்க ஆளுமைகளையே உலகம் எதிர்பார்க்கி றது. உங்கள் ஆற்றல்களை வளர்ப்பதில் கவனம் செலுத்துங்கள். அப்போதுதான் உங்களை வெல்ல முடியும். வெற்றி நிச்சயம்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருணாகல் மாவட்ட நிகவெரட்டிய தேர்தல் தொகுதியில் குக்கிராமமான நம்முவாவ யில் குட்டிக் குடிசையாய் தோற்றம் பெற்றது எமது பாடசாலையான நிக/நம்முவாவ முஸ்லிம் மகா வித்தியாலயம். எழில்கொஞ்சும் இயற்கைச் சூழ லில் மூத்தோரின் முயற்சியால் 1959-05-18 அன்று அது பிறந்தது. அறிஞர்கள் வாழ்த்த அனைவரும் போற்ற, இது 50ஆவது பிறந்த நாளை 2009இல் கொண்டாடியது.

கல்வியின் முதற்படி அத்திபாரமிட்ட பெற் றார் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு சேர்த்த முதல் நாள். நம்முவாவ மாணவர்களின் நன்நாள், பொன்னாள்; முதல் மாணவனாக ப. செய்யது அஹமதும் முதல் மாணவியாக உ. ஒஸிலா உம் மாவும் மாணவர் சேர்ப்புப் பதிவுப் புத்தகத்தில் தடம் பதித்தனர்.

கல்லூரி அதிபர் எச்.யூம் சுஹைலுான் (SLPS)

ஆசிரியர்களும் வழங்கி முன்னேற்றியதை இன்றும் நினைவுகூற வேண்டும். இலங்கையின் பல மூலைகளிலிருந்தும் பணியாற்ற வந்த ஆசிரியர்கள்

நிக/நம்முவாவ முஸ்லிம் மகா வித்தியாலயம்

எமது பாடசாலையின் வரலாற்றுச் சுவடுகளை மறந்துவிட முடியாது. அறிவொளி ஏற்றி ஓய்ந்து விட்ட அதிபர்கள்-ஆசிரியர்களின் அழியாத நினைவுகள், மூத்தோரின் சுவாரஷ்யமான வர லாற்றுக் கதைகள், அனுபவங்கள், சம்பவத் திரட் டுப் புத்தகங்கள் இதற்கு சான்று பகர்கின்றன. முதல் அதிபராக டபிள்யு.எம்.டி. பெரேரா அவர்களுடன் (தியகம மகத்தியா) ஆசிரியையாக ஜீ.ஏ. ரூபாவதி அவர்களும் முதல் நாளே சேர்க்கப்பட்ட 102 மாணவ-மாணவிகளும் பாடசாலையின் ஆரம்ப மனித வளங்களாக மூலதனமிடப்பட உருவானதே நம்முவாவ முஸ்லிம் மகா வித்தியாலயம்.

ஆரம்ப காலத்தில் சிலாபம் வலயத்துக்கு உட்பட்ட பாடசாலையாக இருந்து பின்னர் நிக வெரட்டிய வலயத்துக்கு மாற்றப்பட்ட இப்பாட சாலை சிங்கள மொழிமூலப் பாடசாலையாகவே இயங்கியது. வளங்கள் பற்றாக்குறையாக இருந்த தாலும் அடிப்படை வசதிகள் இல்லாமையினா லும் கல்வித் தரம் மந்தமாகவே காணப்பட்டது.

படிப்படியாக வெளியூர்களிலிருந்து ஆசிரியர் கள் ஒவ்வொருவராக வர, மாணவர் வளமும் அதிகரிக்க, முழு ஒத்துழைப்பையும் அதிபரும் பல துன்பங்களையும் துயரங்களையும் அனுப வித்து பல சவால்களுக்கு முகங்கொடுத்து மாண வர்களது அறிவுக்கு விருந்தூட்டிச் சென்றது பாராட்டத்தக்கது.

ஆரம்பக் கல்விப் பாடசாலையாக ஆரம்பிக் கப்பட்ட இப்பாடசாலை 1963ல் 6ம் தரமும் 1984ல் 9ம் தரமும் 1994ல் 11ம் தரமும் இணைக் கப்பட்டு முன்னேறியது. 1995ம் ஆண்டு க.பொ.த. பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்பைப் பெற்றது முதல் மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்று 1995ம் ஆண்டு நிகவெரட்டிய கல்வி வலயத்தில் சாதனை படைத்ததையும் நாம் நினைத்துப் பார்க்கலாம்.

பௌதிக வளங்களாக 1973ம் ஆண்டு முதி யஸான்சி தென்னகோன் (பா.உ) அவர்கள் ஒரு கட்டடத்தையும் 1980ல் எச்.பீ வன்னிநாயக அவர்கள் ஒரு கட்டடத்தையும் அமைச்சர் எஸ்.பீ நாவின்ன அவர்கள் இரு மாடிக் கட்டடம் ஒன்றையும் தமது நிதியிலிருந்து வழங்கியதை வரலாறு பதிந்து வைத்துள்ளது. எமது பாடசா லைக்கான வளங்களை வழங்கியவர்களில் மேலே குறிப்பிட்டவர்களுடன் மறைந்த திருமதி சோம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரி தென்னகோன் (பா.உ), அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, வடமேல் மாகாண முதலமைச்சர் அதுல விஜேசிங்க, சாந்த பண்டார (பா.உ), வடமேல் மாகாண சபை உறுப்பினர் திரு. நிலந்த சுபுன் ராஜபக்ஷ, நிகவெரட்டிய பிரதேச சபை உறுப்பினர் ஜனாப் என்.எல். யாகூப் ஆகியோரையும் எமது இதயங்கள் நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன. கணினிஅறை, விஞ்ஞான ஆய்வு கூடம் என்பவை அவர்களின் முயற்சிகளே!

தனியார் நிறுவனங்களின் ஊடாக உதவிகளைப் பெற்று பள்ளிவாசல் ஒன்றை முபாரக் மல்லவியும் மைதான புனரமைப்பை திரு. டீ.எம். தனதாச அவர்களும் குடிநீர்வசதியை மேர்சி

232 மாணவர்களோடு பயணித்த பாடசாலையில் தற்போது 525 மாணவர்கள் கற்கின்றனர்.

க.பொ.த. பரீட்சையின் அடைவு மட்டங்களை நோக்கும்போது 2004ல் (22.2%)உம் 2005ல் (25%)உம், (கணித/விஞ்ஞான ஆசிரியர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில்) 2006இல் (54.4%), 2007ல் (58%), 2008இல் (50%), 2009ல் (75.75%), 2010ல் (61%) பெற்று முன்னேற்றம் கண்டிருப்பதை இத்தரவுகள் நிரூபிக்கின்றன.

எமது பாடசாலை '1 சீ' பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டு க.பொ.த. உயர்தரம் முதன் முதலாக 2008.07.15ம் திகதி ஆரம்பிக்கப்பட்டமை பாடசாலை வரலாற்றில் மைல்கல்லாகும்.

நம்முவாவ முஸ்லிம் வித்தியாலய அதிபரும் மகளிர் சங்கமும்

லங்கா நிறுவனம் மற்றும் வாமி நிறுவனம் இணைந்து செய்ததுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை மேம்பாட்டுக் குழு, கல்வி அபிவிருத்திக் குழு, கல்வி அதிகாரிகளின் ஒத்துழைப்பு, பெற்றோர்களின் பேருதவி என்பனவும் எமது பாடசாலைமுன்னேற்றத்தின்படிக்கற்களாயின.

5ம் தரப் புலமைப் பரீட்சையில் பாடசாலை வரலாற்றில் வை. யாஸிர் யாகூப் (2005), ஆர். றஸான் மொஹமட் (2008), எச்.எச். சப்ராஸ், பீ. சிப்ரான் (2009) ஆகிய மாணவர்கள் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்தனர். 2009ல் குருணாகல் மாவட்டத்தில் 10ம் 11ம் இடங்கள் எமது பாடசாலைக்கே! 2004ம் ஆண்டு

2010ம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு 5 மாணவிகள் மட்டும் தோற்றி ஐவரும் சித்தியடைந்து 100 வீத அடைவை பெற்றுத்தந்தது பெருமைக்குரியதே. 2011ம் ஆண்டு எம்.எல்.எம். அப்ஸால், ஏ.டபிள்யு. நிஸ்மியா, ஆர். சதீகா ஆகிய 3 பேர் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பைப் பெற்று பாடசாலை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் தம் பெயர்களைப் பதித்துக் கொண்டனர்.

பாடசாலை மாணவி வை. யுஸ்ரா ஆங்கில தின போட்டியில் வலய மட்டத்தில் 1ம் இடத்தையும் மாகாண மட்டத்தில் 3ம் இடத்தையும் பெற்றார். மேலும் அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டியில் இசையும் அசைவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பகுதித் தலைவர்களும் மாணவத் தலைவர்களும்

நிகழ்ச்சியில் வலய மட்டத்தில் 1ம் இடத்தையும் மாகாண மட்டத்தில் 2ம் இடத்தையும் பெற்று சாதனை படைத்தார். அடுத்து உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தினால் நடத்தப்பட் இலக்கிய விழாவில் மாகாண மட்டத்தில் 1ம் இடத்தை என். ஹஸானா பெற்றுக் கொண்டார். 2010ம் ஆண்டில் எமது பாடசாலை கரப்பந்தாட்ட அணி வலய மட்டத்தில் முதலிடம் பெற்றது பாராட்டத்தக்கது.

பல சாதனைகள் படைத்து வரும் எமது பாடசாலை நிரந்தர கட்டிட வசதியின்மை, நூலக வசதியின்மை, செயற்பாட்டறையின்மை, ஆசிரியர் விடுதியின்மை, ஆசிரியர் பற்றாக்குறை போன்ற குறைபாடுகளையும் கொண்டுள்ளது. இவை எமது பாடசாலை வளர்ச்சிக்கான தடைகளாகும்.

2004.09.02ல் கடமையேற்று தற்போது வரை கடமையாற்றும் அதிபர் அல்ஹாஜ் சுஹைலூன் அவர்களின் அயராத முயற்சி, துடிப்பான செயற்பாடுகள், ஆளுமை, ஆர்வம், முன்னாயத்தங்கள், அனுபவம் என்பன முன்னேற்றப் பாதையில் பாடசாலையை இட்டுச் செல்கின்றன. அதிபரோடு ஆசிரியர்களின் பங்களிப்பு, மாணவர்களது திறமைகள் ஒருங்கிணைய எமது பாடசாலையின் வரலாறு நல்ல பிரஜைகளை உருவாக்கும் என்பது தெளிவு. அறிவொளி வீசட்டும்; அகக்கண்கள் திறந்து வாழட்டும் பாடசாலை; வளரட்டும் அதன் பணிகள்!

PUBLIC LIBRARY
JAFFNA

ஆசிரியர் குழாம் - 2012

1. அல்ஹாஜ் எச்.யூ.எம். சுஹைஹலூன் (அதிபர்)
2. திருமதி. சீ. அஸ்மா பீபி
3. செல்வி. டப்ளியூ.எம்.எஸ். குமாரி ஹாமி
4. திரு. எம்.எச்.எம். பாரிஸ்
5. மௌலவி. எஸ். அசனா மரிக்கார்
6. திருமதி. எம்.எப். பிர்னாஸ்
7. திரு. ஏ.எஸ்.எம். சஜீர்
8. திரு. எம்.எல்.எம். மன்சூர்
9. திரு. யூ.எல்.ஏ. மொஹிதீன்
10. திருமதி. ஏ.சீ.யூ. றிஹானா
11. திரு. டீ.எம். சீலாவதி
12. திரு. எம்.எஸ். றஸ்மி
13. திரு. ஏ.கே.எம். நிஸ்பர்
14. திரு. எம்.ஐ.எஸ். ஹமீட்
15. திருமதி. ஆர். ரனீஷா பேகம்
16. திருமதி. எஸ்.எச்.எஸ். மிஸிரியா
17. திருமதி. ஏ.ஆர். மிஹிருன் நிசா
18. திருமதி. எம்.எப். அப்ஹானா
19. திரு. எஸ். றஹீம்
20. திருமதி. எஸ்.டி.என். சுஹைனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)

மாணவர்களின் ஆளுமை விருத்தியில்

தொடர்பாடல் திறன் (Communication Skills)

(சென்ற இதழின் தொடர்...)

03. தகவல்களை வழங்குதல்

தகவல்களை வழங்கும்போது முடியுமானளவு ஐம்புலன்களையும் பயன்படுத்த முயற்சியுங்கள். வழங்கப்படுகின்ற தகவல்கள் உரியவரைச் சரியான முறையில் சென்றடைய பின்வரும் அம்சங்கள் துணைசெய்கின்றன:

தெளிவாகப் பேசுதல்

- ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ளும் மொழியைப் பயன்படுத்துங்கள்.
- தொனியை உயர்த்தியும் தாழ்த்தியும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அமைத்துக் கொள்ளுங்கள்.
- குறிப்பாகச் சொல்ல நாடும் விடயத்திற்கு அழுத்தம் கொடுங்கள்.
- அட்டவணைகள், வரைபடங்கள், வரிப்படங்கள் போன்றவற்றைக் காட்சிப்படுத்தி விளக்குங்கள்.
- செவிமடுப்பவரின் கண்கள் மற்றும் நெற்றிப் பகுதிகளைப் பார்த்துப் பேசுங்கள்.

இவை தவிர இன்னும் பல பயனுள்ள வழிமுறைகளைப் பயன்படுத்தி தகவல்களை இலகுபடுத்தி யாவரும் விளங்கும்படி செய்யலாம்.

மாணவர்களைப் பொறுத்தவரையில் தொடர்பாடற் திறன் என்பது அவசியம் வளர்த்துக் கொள்ள வேண்டிய ஆளுமைப் பண்புகளில் ஒன்றாகும். வகுப்பறையில் ஆசிரியர் கற்பிக்கின்ற விடயங்கள் தவிர பாடப்பரப்புக்கு வெளியிலும் ஆசிரியர்கள் பல கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்குவர். இவற்றை ஒழுங்கான முறையில் செவிமடுத்து சேமித்துத் தேவையானபோது மீட்டிப் பயன்படுத்தும் போது அங்கு சிறந்த ஆளுமைகள் வளர்கின்றன. சரியான முறையில் செவிமடுக்கத் தவறும்போது வேண்டப்பட்ட காரியம் சரியாக நிறைவேறாமல் பிழைத்துவிடுவதுடன் உனக்கு ஒரு விடயத்தைச் சொல்வது எருமை மாட்டில் மழை பெய்வதுபோல் என்றும் செவிடன் காதில் ஊதிய சங்குபோல் என்றும் ஆசிரியரின் வாயால் திட்டு வாங்க வேண்டிய சூழலும் ஏற்படுகிறது. பிற்காலத்தில் இது மாணவர்களின் ஆளுமையில் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தி சமூகத்திலிருந்தும் ஒதுக்கப்படக் காரணமாக அமையலாம்.

மாணவத் தலைவர்கள், வகுப்புத் தலைவர்கள் மற்றும் ஏனைய பொறுப்புக்களிலுள்ள மாணவர்களும் அதிபர்களிடமிருந்தும் பொறுப்பாசிரியர்கள் மற்றும் ஏனைய உயர் பொறுப்புக்களில் உள்ளவர்களிடமிருந்தும் தகவல்களைச் சரியான முறையில் பெற்று அதன்படி ஒழுகத் தவறின் அங்கு ஒழுக்காற்று மற்றும் நிருவாகச் சிக்கல்கள் ஏற்பட ஏதுவாக அமைந்துவிடும். இவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ள தொடர்பாடல் திறன் என்ற ஆளுமைப் பண்பை மாணவர்கள் அவசியம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பெறுகின்ற தகவல்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள எப்போதும் தம்முடன் சிறியதொரு குறிப்புப் புத்தகத்தை வைத்துக் கொள்வது சாலச் சிறந்ததாகும். கட்டளைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் போது ஏதாவது தகவல்கள் விளங்காவிட்டால் அல்லது மயக்கம், குழப்பம் காணப்பட்டால் அந்த இடத்தில் தமது சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். பிழையாக விளங்கித் தவறாகக் காரியமாற்றுவது ஆளுமை விருத்திக்கு உதந்ததல்ல.

பாடசாலையில் நீங்கள் பல பொறுப்புக்களை வகிக்கலாம். உங்களுக்கு தலைமைத்துவப் பொறுப்புக்கள் வழங்கப்பட்டிருக்கலாம். இச்சந்தர்ப்பத்தில் மேலிடத்தில் வருகின்ற உத்தரவுகள் தகவல்களையும் உங்களுடைய சில தீர்மானங்களையும் உங்களுடைய கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்களுக்கு வழங்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும். நீங்கள் தகவல்களை வழங்கும்போது அமைதியாகவும் ஆறுதலாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதானமாகவும் தெளிவாகவும் பேசுங்கள். தேவைப் படும்போது அட்டவணைகள், மரவரிப் படங்கள், வரைபடங்கள் மற்றும் இதுபோன்ற தகவல்களை இலகுபடுத்தக்கூடிய அம்சங்களைப் பயன்படுத்துங்கள். இதற்காக Bristol Board, Art Board, Poster Papers போனறவற்றையும் Multi Media Projector, Over Head Projector போன்ற நவீன சாதனங்ளையும் பயன்படுத்து லாம்.

பேசும்போது

பேசும்போது குறைவாகப் பேசுவதை வழக்கப் படுத்திக் கொள்ளுங்கள். பலர் உரையாடும்போது அனாவசியமாக நீண்ட நெடிய விளக்கங்களைக் கொடுக்க ஆரம்பித்து விடுகின்றனர். ஆழ்மனதில் தங்கியிருக்கும் தாழ்வு மனப்பான்மை அல்லது பாதுகாப்பின்மை போன்ற உணர்வுகள் இதற்கு முக்கிய காரணங்களாக அமைகின்றன.

அளவுக்கதிகமாகப் பேசுவது ஒரு குறையாகும். ஆனால் அளவுக்கதிகம் என்பதை எந்த அளவு கோலைக் கொண்டு நிர்ணயிப்பது என்ற கேள்வி எழ லாம். மேடைப் பேச்சென்றால் இன்னும் கொஞ்சம் பேசமாட்டாரா என்று பிறர் நினைக்கும் நேரத்தில் முடிக்க வேண்டும் என்பர். பொதுவாக குறிப்பிட்ட இடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவாறு போதுமான தகவல்களையும் விடயங்களையும் மாத்திரம் பேச வேண்டும். நிறையப் பேசினால் நம் கூற்று மட்டுமல் லாது நம் ஆளுமையும் சிதைந்துபோகும் அபாயம் ஏற்படுகிறது. இது தவிர நம் பேச்சு செல்லும் திசையும் நம் கட்டுப்பாட்டிலிருந்து விலகி ஏதோ பேசி வம்பில் கொண்டுவிடும் அபாயமும் ஏற்படுகிறது.

குறைவாகப் பேசுபவர்கள்மேல் எப்போதும் ஏனையோர் தன்னையறியாமல் ஒருவித அச்சம் கலந்த மரியாதையுடன் அணுகுவார்கள். அதிகமாகப் பேசப் பேச, ஏதாவது முட்டாள்தனமாகப் பேசிவிட ஏதுவாகும். ஒவ்வொரு சொல்லும் நம் முழுக் கட்டுப்பாட்டுடனும் நம் சிந்தனை அடிப்படையில் முடிவு செய்யப்பட்டும் வெளிவர வேண்டும். அது பாட்டுக்கு லீக்கான நீர்க்குழாய்போல் கொட்டக் கூடாது.

முக்கியமான தகவல்களைப் பரிமாறுவதற்காக கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் தேவையற்ற விட யங்களை அளவுக்கதிகமாகப் பேசும்போது எது தேவையானது, எது தேவையற்றது என்ற விடயத்தில் செவிமடுப்பவர்கள் குழம்பி விடுவர். எனவே, அளவா கப் பேசி ஆளுமையை வளர்க்க ஒவ்வொரு மாணவ னும் முயற்சிக்க வேண்டும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர் கள் கூறியுள்ளார்கள்: **"யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொள்கிறாரோ அவர் பேசினால் நல்லதைப் பேசட்டும் இல்லாவிட் டால் வாய் மூடியிருக்கட்டும்."**

இந்த ஹதீஸ் நல்ல விடயங்களை மாத்திரம் பேசுவதை ஈமானுடன் தொடர்புபடுத்திப் பேசுவதை அவதானிக்க முடிகிறது. எனவே, ஒரு முஃமின் தேவையான நல்ல விடயங்களை மாத்திரம்தான் பேசுவார். தேவையற்ற மோசமான விடயங்களைப் வளவளவெனப் பேசி மற்றவர்களைத் துன்புறுத்து வதை விட்டும் அலுப்பூட்டிக் களைப்படையச் செய் வதைவிட்டும் தவிர்ந்திருப்பார்.

உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தேவையற்ற விடயங்களைப் பேசக்கூடாது என்பதற்காகவே தனது வாய் நிறைய கூழான் கற்களைப் போட்டுக்கொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள் என்பதை வரலாறு சுட்டிக்காட்டுகிறது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர் கள் கூறியதாக ஸஹ்ல் இப்னு ஸஃது (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்:

"யார் இரு தாடைகளுக்கும் இரு தொடைக ளுக்கு மிடையே உள்ளவற்றிற்குப் பொறுப்பேற் றுக் கொள்கிறாரோ அவருக்கு நான் சுவர்க்கத் தைக் கொண்டு பொறுப்பேற்கிறேன்."

அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

"ஒரு அடியான் நல்லதா கெட்டதா என சிந் திக்காமல் ஒரு வார்த்தையைப் பேசிவிடுகிறான். அதன் காரணமாக நிச்சயமாக அவன் மேற்கிக் கும் கிழக்கிற்குமிடையே உள்ள தூரத்தை விட மிகத் தூரமாக நரகத்தில் விழுந்து விடுகிறான்."

எனவே, அநாவசியமாக சிந்திக்காமல், தன்பாட் டுக்கு வாய்க்கு வருவதையெல்லாம் கொட்டித் தீர்ப்பதால் ஆளுமைக் குறைபாடு மாத்திரமன்றி நரகில் விழுவதற்கான சந்தர்ப்பமும் ஏற்படுகிறது என்பதையும் அளவாகவும் அடக்கமாகவும் தேவை யான விடயங்களை மாத்திரம் பேசுவதால் ஆளுமை விருத்தியடைவதுடன், நாளை மறுமையில் சுவனமும் கிடைக்கும் என்பதையும் மேற்கூறப்பட்ட நபி மொழிகள் விளக்குகின்றன.

மாணவப் பருவத்தில் வளர்த்துக் கொள்ளும் இவ் வாறான ஆளுமைப் பண்புகள் பாடசாலை வாழ்க் கையுடன் முற்றுப் பெறுவதில்லை. சமூக வாழ்க்கை, தொழில் வாழ்க்கை என அனைத்திலும் தாக்கம் செலுத்துகிறது. எனவே, தொடர்பாடற் திறனை வளர்த்து முழுமையான ஆளுமையை விருத்தி செய்ய முயற்சி செய்வோம். இதனூடாக சுவனம் நுழைவதற் கான சந்தர்ப்பத்தையும் அமைத்துக் கொள்வோம், இன்ஷா அல்லாஹ்■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றைக்கண் வீராங்கனை
மேரி கத்தரின்



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் பிறந்த அமெரிக்க ஊடகவியலாளரான மேரி கத்தரின் கொல்வின் (Marie Catherine Colvin) பிரித்தானிய 'சன்டே டைம்ஸ்' (The Sunday Times) பத்திரிகை நிறுவனத்தில் 1985 இல் இணைந்தார். 2001 ஏப்ரல் மாதத்தில் இலங்கையின் யுத்த பிரதேசத்தில் பணியாற்றியபோது தனது இடது கண்ணை இழந்தும் கூட கிழக்குத் தீமோர், செச்னியா, லெபனான், ஈராக், லிபியா, சிரியா ஆகிய நாடுகளில் பேனா எனும் ஆயுதத்துடன் போர் முனை அநியாயம், அத்துமீறலுக்கு கண்கண்ட சாட்சியாக வலம் வந்தார். எனினும், 2012 பெப்ரவரியில் சிரியாவின் ஹொம்ஸ் நகரில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்தார்.

ராகுல் டிராவிட்

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான ராகுல் ராவிட் 2012 மார்ச் மாதத்தில் சர்வதேச டெஸ்ட் கிரிக்கட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றதைத்



திரு. பீ. உமா சங்கர்,
B.Com (Jaf), M.Com (Kelaniya) (R) Spl.Trd.Com,
NDBF, Sri Lanka Technical College - Colombo

தொடர்ந்து சர்வதேச கிரிக்கட் அரங்கிலிருந்து முழுமையாக ஓய்வு பெற்றார். இவர் 164 டெஸ்ட் போட்டிகளில் 13,288 ஓட்டங்களையும் 344 ஒரு நாள் போட்டிகளில் 10,889 ஓட்டங்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பூமி மணித்தியாலம் (Earth Hour)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகளாவிய ரீதியில் வருடாந்தம் அனுஷ்டிக் கப்படும் சர்வதேச நிகழ்வாக 'பூமி மணித்தியா லம்' கருதப்படுகின்றது. இப் பூமி மணித்தியாலமா னது காலநிலை மாற்றத்துக்கு எதிராக அனுஷ்டிக் கப்படுகிறது. இப் பூமி மணித்தியாலமானது முதலாவதாக 2007ம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் 2.2 மில்லியன் வீடுகளும் வியாபார நிறுவனங்களும் ஒரு மணித்தியாலம் மின்சார ஒளியை நிறுத்தி அனுஷ்டித்ததன் மூலம் ஆரம்பிக்கப்பட்டது. இது உலக வனவிலங்கு நிதிய ஒத்துழைப்புடன் நடைபெறுகின்றது. இவ்வருட பூமி மணித்தியாலம், மின் உபரணங் களையும் மின்சாரத்தையும் ஒரு மணித்தியாலத் திற்கு நிறுத்தி காலநிலை மாற்றத்துக்கு எதிராக செயற்படத் தயாராகி வருகிறது.

இளவயது முதல்வர் அகிலேஷ் யாதவ்



இந்தியாவின் மிகப் பெரிய மாநிலமாக கருதப் படுவது உத்தர பிரதேச மாநிலமாகும். இங்கு 2012 மார்ச் மாதம் சட்டப்பேரவைத் தேர்தல்கள் நடைபெற்றன. உத்தர பிரதேசம், உத்தர கண்ட், பஞ்சாப், மணிப்பூர், கோவா ஆகிய மாநிலங்களி லேயே நடைபெற்ற இத்தேர்தலில் மிகப் பெரிய கட்சிகளான காங்கிரஸ் கட்சி, பாரதீய ஜனதா கட்சி என்பன பின்தள்ளப்பட்டு முலாயம் சிங் யாதவ்வின் சமாஜவாடி கட்சி அறுதிப் பெரும் பான்மையைப் பெற்றது. இதன்படி இவரது மகன் அகிலேஷ் யாதவ் முதலமைச்சரானார். அகி லேஷ் யாதவ் முதலமைச்சரானதன் மூலம் மிக மிக இள வயதில் (38) பொறுப்பேற்ற முதலாவது முதலமைச்சராக அவர் விளங்குகின்றார்.

ஒஸ்கார் விருதுகள் – 2012



சர்வதேச ரீதியில் சிறந்த திரைப்படங்களை தெரிவு செய்து வருடாந்தம் வழங்கப்படும் விரு தான ஒஸ்கார் விருதின் 84வது விருது விழா 2012 பெப்ரவரியில் அமெரிக்க கலிபோர் னிய மாநிலத்தில் உள்ள ஹொலிவூட்டில் நடை பெற்றது. இதில் 2011ம் ஆண்டில் பிரான்ஸில் தயாரிக்கப்பட்ட கறுப்பு-வெள்ளை மற்றும் மௌனப் படமான 'தி ஆர்ட்டிஸ்ட்' (The Artist) திரைப்படம் சிறந்த படம், சிறந்த இயக்குனர், சிறந்த நடிகர், சிறந்த இசை என ஐந்து விருது களைப் பெற்றுக் கொண்டது. இத்திரைப்பட இயக்குனர் மைக்கோல் ஹஸானாவியஸ் (Michel Hazanavicius) ஆவார்.

மௌனத் திரைப்படமொன்று ஒஸ்கார் விருது பெறுவது 1929ம் ஆண்டிற்கு பின்னர் இதுவே முதல் தடவை ஆகும். இத்திரைப்படத்தில் நடித்த 'உக்கிலி' என்ற நாயும் ஒஸ்கார் விருது பெற்றமை குறிப்பிடத்தக்கது. இத்திரைப்படத்திற்கு அடுத்து 'ஹியூகோ' என்ற திரைப்படம் வேறு ஐந்து பிரிவுகளில் விருது பெற்றுள்ளது.■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியும் இலக்கியமும்

ஆசிரியர்: நஸ்ரா நிசாம்தீன் BA (Hons) PGDE

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

தனிப்பாடல் திரட்டு (தொடர்ச்சி)

பாடல்: ஆழிவாய் சத்தம் அடங்காதோ...

வினா: இப்பாடலின் பொருளை எழுதுக. நயத்தினைப் பரிசீலிக்குக.

விடை: (பொருள்) கடலிலுள்ள ஓசையானது ஒடுங்க மாட்டாதோ, நான் வளர்த்த கோழியானது கூவாதிருப்பதற்குக் காரணமாக அதன் வாயை மண்ணின் பகுதி மூடிக் கொண்டதோ, ஊழியானது இந்த இராத்திரியாக உருவெடுத்ததோ, பகலவனும் அவனுடைய தேரும் பாதாளத்துக்குள் உருண்டு விழுந்தனவோ! (அதனால்தான் சூரியன் உதிக்காமல் இரவு நீடிக்கின்றதோ)

நயம்: ஒரு தலைவியின் உள்ளத் தவிப்பும் அலைமோதும் எண்ணங்களும் இரவு நீடிப்பதாக உணர்த்தும் தன்மையும் இப்பாடலினூடாக கவிஞர் கூற வருவதாகும். அதனை சிறப்பாகக் கூறிச் செல்லும் விதம் நயத்திற்குரியது.

தலைவியானவள், "எப்பொழுது விடியுமோ" என்று ஏங்கித் தவிப்பதாகக் கூற வந்த கவிஞர், கடலின் ஒலி அடங்காதோ? சேவல் கூவாமல் இருப்பது ஏன்? தேரும் சூரியனும் பாதாளத்துக்குள் விழுந்து விட்டனவோ என தலைவி நினைப்பதாக கூறுமாற்று நயத்திற்குரியது.

"யான் வளர்த்த கோழி..." எனும் வரிகளும் நயத்திற்குரியதாக உள்ளது. நான் வளர்த்த சேவலுக்கு என்னில் இரக்கமில்லை, அது கூவவில்லை என அவள் எண்ணுமாற்றும் பகலவன் உதிக்க முடியாமலும் தலைவனது தேர் வேகமாக தன்னிடம் நோக்கி வர முடியாறும் பாதாளத்துக்குள் உருண்டு விழுந்துவிட்டதாக துயரம் காட்டப்படும் விதமும் நயத்திற்குரியதாகும்.

இராப் பொழுது நீடிப்பதற்கு தலைவி கூறும் காரணங்களும் நீடிப்பதாக உணர்வதும் கவிஞர் அதை உணர்த்துவதும் மனதைத் தொடுகிறது. இரவு நீடிப்பதை தலைவி ஊழிக்காலமாக நினைப்பதும் இராப் பொழுதை ஊழிக் காலமாக கவிஞர் உருவகித்திருப்பதும் தலைவியின் அக ஏக்கத்தைப் புலப் படுத்தும் கவிஞரின் கவிக்கு அணி சேர்க்கிறது எனலாம்.

வினா: பின்வரும் பாடலின் பொருளை எழுதுக.

பாடல்: நிலவாய் விளங்குதலா னீள்வான் படிந்து
சிலபோ துலாவுதலாற் சென்று - தலைமேல்
உதித்து வரலா லுயர்மா மலையை
மதிக்கு நிகராக வழுத்து

விடை: (பொருள்) உயர்ந்த பெரிய மலையானது நிலத்தின் மீது தோன்றி உயர்வாய் விளங்குகின்றது. அம்மலையானது பெரிய மேக மண்டலத்தை தொட்டுக் கொண்டு குறிஞ்சிப்பூக்கள் தன்னகம் விளக்கமாகத் திகழ நிலத்தின் மீது பரவி அழகாக விளங்குகிறது. அஃதே சந்திரன் நிலாவொளியைக் கொடுக்கிறது. நீண்ட வானத்தில் உலாவுகின்றது. நிலத்திற்கு மேலாக உதயமாகி எமது தலைக்குமேல் ஆகாய உச்சியில் வலம் வருகின்றது. ஆகவே, உயர்ந்த பெரிய மலையைச் சந்திரனுக்கு சமனாகச் சொல்லி வணங்கு!

வினா: "நிலவாய்..." என்று தொடரும் பாடலின் நயத்தினை துலக்குக.

விடை: இப்பாடலைப் பாடியவர் காளமேகப் புலவர். உயர்ந்த பெரிய மலையானது சந்திரனுக்குச் சமனாகுமென சிலேடை அணி மூலம் கூறிச் செல்லும் விதம் நனி சொட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையைப் பற்றி கவிஞர் கூறுவதாவது: நிலத்தின் மீது தோன்றி உயர்ந்து விளங்கி மேக மண்டலத்தை தழுவியபடியிருந்தாலும், அதில் குறிஞ்சிப் பூக்கள் சில தோன்றியிருந்தாலும் நிலத்தில் படர்ந்துயிருத்தலும் என்கிறார். இதனை இரு கருத்துக்கள் தரும் வகையில் பாடியிருத்தல் நயத்திற்குரியது. சந்திரனையே அவ்வாறு மற்றைய கருத்தாகப் புலப்படுத்தும் விதம் கவிஞரது வித்துவச் சிறப்பை துலக்குகிறது. சந்திரன் நிலவொளி வீசி நீண்ட ஆகாயத்தில் பொருந்தித் திரிவதும் நிலத்துக்கு மேலாக உதித்து எமது தலைக்கு மேல் ஆகாயத்தை பொருந்தியிருத்தல் என்றவாறு சிலேடை அணியில் பொருத்தமாகப் பாடியுள்ளார் கவிஞர்.

வினா: 'நீள்வான்', 'மாமலை' என்பதன் பொருள் தருக.

விடை: நீள்வான்- நீண்ட வானம் (பரந்த வானம்)
மாமலை- பெரிய மலை

வினா: "நிலவாய்...." என்று தொடரும் பாடலில் வந்த சிலேடை அணி சொற்றொடர்களைக் கூறுக.

1. நிலவாய் விளங்குதலால்
2. நீள்வான் படிந்து உலாவுதலால்
3. தலைமேல் உதித்து வரலால்

(தொடரும்)

பௌதிகவியல் (35ம் பக்க தொடர்)

5. இசை நிகழ்ச்சி ஒன்றில் புல்லாங்குழல், வயலின் போன்ற பல்வேறு வகை இசைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டு இசைக்கப்பட்டபோது எல்லோரும் மகிழ்ச்சியுடன் அதனை இரசித்தனர்.

i. (a) புல்லாங்குழல் எவ்வகையான இசைக் கருவியாகும்?
(b) புல்லாங்குழல் இசைக்கும்போது துளைகளை மூடித் திறப்பதுண்டு. இதனால் ஏற்படும் மாற்றம் யாது?

ii. (a) வயலின், கிற்றார் என்பவற்றில் சுருதி கூடிய இசையை உருவாக்க பயன்படும் உத்திகள் 3 இனைக் குறிப்பிடுக.
(b) கிற்றார், வயலினில் துளை கொண்ட மரப்பெட்டி இருப்பதன் நன்மை யாது?

ஒளியியல்

ஒளித் தொகுப்பு: - பொருள்களில் ஒளி பட்டுத் தெறிப்படைதல் ஒளித்தொகுப்பு எனப்படும்.

1. ஒளித்தெறிப்பு விதிகளைக் குறிப்பிடுக.
2. தளவாடியொன்றின் முன்னால் உள்ள பொருள் ஒன்றின் ஆடியில் தென்படும் விம்பத்தின் இயல்புகள் 4 ஐ எழுதுக.
3. பின்வரும் தேவைகளின்போது பயன்படும் ஆடி வகையை எழுதுக.
(a) பல் வைத்தியர்கள் மேற்தாடைப் பற்களை அவதானித்தல் (b) சூழ்காட்டிகளில் பயன்படுத்தல்
(c) வாகன சாரதி ஆடியாகப் பயன்படுத்தல் (d). வாகன முன்பக்க விளக்குகளில்
4. குழிவாடியொன்றின் முன்பாக பொருள் ஒன்றை அதன் குவியத் தூரத்தின் இரண்டு மடங்கு தூரத்திற்கு அப்பால் வைக்கும்போது தென்படும் விம்பத்தின் 3 இயல்புகளை எழுதுக.

ஒளிமுறிவு: - ஒளியை ஊடுபுகவிடும் ஓர் ஊடகத்திலிருந்து மற்றோர் ஊடகத்திற்குச் சாய்வாகச் செல்லும் ஒளிக்கதிர்களின் பாதையில் ஏற்படும் மாற்றம் ஒளி முறிவு ஆகும். இது நிகழ்வதற்கான காரணம் வெவ்வேறு ஊடகங்களில் ஒளிக்கதிரின் வேகம் மாறுபடுவதினால் ஆகும்.

5. ஒளி முறிவு விதிகளை எழுதுக.
6. ஒளியின் முழு அகத்தெறிப்பு காரணமாக ஏற்படும் தோற்றப்பாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.
7. ஒளியின் பின்வரும் வகைக்குரிய நிறங்களை எழுதுக.

முதன்மை நிறங்கள்	துணை நிறங்கள்	நிரப்பு நிறங்கள்

8. வானியல் தொலைகாட்டி ஒன்றிற்கும் அரிய இருவிழியனுக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டை எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைச் சரம்

பாடசாலை

சின்னஞ்சிறு சிட்டாய்
வந்து சேர்ந்த எம்மை
சிறகடிக்கும்
பறவைகளாய்
சிறக்கச் செய்த
பாடசாலையை
அன்புடன்
வாழ்த்துகிறேன்
பாலராய் வந்த
எம்மை பண்புடைய
மனிதராய் மாற்றியதும்
பாடசாலையே!
அன்பை அருளும்
நண்பர்களையும்
அறிவைப் பெருக்கும்
அகரத்தையும்
அன்பளிப்பாய் தந்த
பாடசாலையை
வாழ்த்துகின்றேன்!
என்றும் வாழ்த்துகிறேன்!

ஐ.எப். றிபானா
தரம்: 8, பொ/அல்ஹிலால் மு.ம.வி, தம்பாளை

பெண்



பெண்ணே!
அம்மா. . . என்னும்
வார்த்தையால் நீ வாழ்வில்
பெண்ணின் முழுமையைப் பெற்று
தாய்மை என்னும்
கிரீடம் சூட்டப்படுகிறாய்
நீ - தாயான பின் ஒரு
கண்ணாடியாகிறாய்- உனக்கல்ல
உன் குழந்தைக்கு
குழந்தையின் சிரிப்பே
உன் சிரிப்பும்
குழந்தையின் அழுகையே
உன் கண்கலங்கல்களும்

பெண்ணே!
அன்பு எனும் மூன்றெழுத்துக்கு
அர்த்தங்கள் ஆயிரம் உண்டு- அதை
உணர்த்தும் ஒரே ஒரு
உருவம் நீயானாய்

பெண்ணே!
உனக்கு ஒரு நாள் ஒதுக்கி
மகளிர் தினம் கொண்டாடினால்
போதாதடி - உன் புகழ் பாட
வாழ் நாளும் போதாதடி

றீம் றஸ்லா ஜஸீன்
முஸ்லிம் மகளிர் அ.க, கள் எலிய

நட்பு

ஒருவரையொருவர் புரிந்து கொண்டு
கை கோர்த்து நடந்து செல்வோம் வா!
ஈமானியத் தென்றல் வீசுகிறது
ஓடோடி செல்வோம் சுவாசிக்க நீயும் வா!

என் கவலைகள் உன் கவலைகளாகவும்
உன் சோகங்கள் என் சோகங்களாகவும்
எண்ணி தோள் கொடுத்து வாழ்வோம் வா!

மனம் விட்டு நான் உன்னுடன் பேச
கண்ணீர் விட்டு அழுத நாட்களை
மீட்டிப் பார்ப்போம் வா!

தெரியாமல் இணைந்தோம் - அன்று
தெரிந்தும் பிரிந்துள்ளோம் இன்று
காற்றின் வேகம் போல்
காலங்கள் விரைவாக ஓடியது

காலங்கள் ஓடினாலும்
கட்டிடங்கள் சிதைந்தாலும்
உலகமே மறுத்தாலும்
நாம் கொண்ட ஈமானிய நட்பு
என்றும் மாறாதம்மா!

றிகார் அஸீஸ்
பிறைந்தலைச்சேனை, வாழைச்சேனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10,11 தர மாணவர்களுக்கானது

விஞ்ஞானம்

ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப் (விஷேட பயிற்சி ஆசிரியர்- விஞ்ஞானம்)

மனித உடலின் பிரதான தொகுதிகள் – தரம் 10

01. குருதியைக் கொண்டு செல்லும் கலன்களின் இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன. இதற்குப் பொருத்தமான குருதிக் கலனை இடைவெளியில் எழுதுக.

i. தடித்த, மீள்தன்மை கொண்ட சுவர்கள் காணப்படும். இதனுள் பெருமளவு அமுக்கத்துடன் குருதி பாயும். ....

ii. சுவர்கள் மெல்லியதாகவும் மீள்தன்மையற்றதாகவும் காணப்படும். இதனுள் குறைந்தளவு அமுக்கம் காணப்படும். ....

iii. இதனுள் சுவர் தனிக்கலப் படையாலானது. இதிலிருந்து கலங்களுக்குப் பதார்த்தங்கள் பரிமாற்றமடையும். ....

இரட்டைக் குருதிச் சுற்றோட்டம்

மனிதனின் குருதி உடலெங்கும் சுற்றியோடுவதற்காக இதயத்தினூடாக இரண்டு முறை சுற்றியோடுதல் இரட்டைக் குருதிச் சுற்றோட்டம் எனப்படும். அதன் இரு வகைகளாவன:

i. தொகுதிச் சுற்றோட்டம்: இடது இதயவறையிலிருந்து உடல் இழையங்களுக்குச் செல்லும் குருதி மீண்டும் வலது சோணையறைக்கு கொண்டு வரப்படல்.

ii. சுவாசப்பைச் சுற்றோட்டம்: வலது இதயவறையிலிருந்து சுவாசப்பைக்குச் செல்லும் குருதி மீண்டும் இடது சோணையறைக்கு கொண்டு வரப்படல்.

வால்வுகளின் அமைவும் தொழிற்பாடும்

வால்வின் வகை	அமைவிடம்	தொழிற்பாடு
i. முக்கூர் வால்வு	வலது சோணையறைக்கும் வலது இதயவறைக்கும் இடையில்	வலது இதயவறைக்குச் சென்று குருதி மீண்டும் பின்னோக்கிப் பாய்வதைத் தடுத்தல்
ii. இருகூர் வால்வு (மைற்றர் வால்வு)	இடது சோணையறைக்கும் இடது இதயவறைக்கும் இடையில்	இடது இதயவறைக்குச் சென்ற குருதி மீண்டும் பின்னோக்கிப் பாய்வதைத் தடுத்தல்
iii. அரைமதி வால்வு	சுவாசப்பை நாடியினதும் தொகுதி நாடியினதும் அடியில் பெருநாடிகளினுள் சென்ற குருதி	இதயத்திற்கு திரும்பப் பாய்வதைத் தடுத்தல்

02. மனித சுவாசத் தொகுதியின் தொழிற்பாட்டைக் காட்டக்கூடிய அமைப்பு மாதிரியை அருகிலுள்ள உரு காட்டுகின்றது.

i. இறப்பர் மென்சவ்வினை கீழ் நோக்கி இழுக்கும்போது உமது அவதானம் யாது? இது எவ்வகையான சுவாசப் பொறிமுறையினைக் காட்டுவதாக அமையும்? ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. இங்கு பின்வரும் பகுதிகள் மனித சுவாசத் தொகுதியின் எப்பகுதியின் தொழிற்பாட்டிற்கு ஒத்தது என்பதைக் குறிப்பிடுக.



(a) இறப்பர் மென்சவ்வு:..

(b) பலூன்கள்: ....

(c) நேரிய கண்ணாடிக் குழாய்:..

(d) Y வடிவக் குழாய்: ....

iiii. வாதனாளியில் C வடிவிலான கசியிழையம் காணப்படுவதன் நன்மை யாது? ....

iv. Y வடிவக் குழாய்கள் குறிக்கும் சுவாசத் தொகுதியின் பாகத்தில் ஏற்படும் நோயினையும் அதன் இரு அறிகுறிகளையும் எழுதுக.

நோய்: .... அறிகுறி: ....

v. சுவாசப்பைச் சிற்றறைகளில் வாயுப் பரிமாற்றத்தை வினைத்திறனாக மேற்கொள்ள ஏதுவாக அமைந்துள்ள சிறப்பியல்புகள் 4 இனைக் குறிப்பிடுக. ....

மனித சமிபாட்டுத் தொகுதி

- சமிபாட்டுத் தொகுதியின் பிரதான இரு செயற்பாடுகள்: 1. உணவுச் சமிபாடு 2. அகத்துறிஞ்சல்
- உணவுச் சமிபாட்டின் இரு பிரதான வகைகளும் எவை?

i. பொறிமுறைச் சமிபாடு:- உணவுக் கூறுகள் பௌதிக ரீதியாக சிறு கூறுகளாக மாற்றப்படல்

இது பற்கள், இரைப்பைச் சுவர், பித்தம் என்பவற்றினால் நிகழ்த்தப்படுதல்

ii. இரசாயனச் சமிபாடு:- உணவுக்கூறுகள் நொதியத் தொழிற்பாட்டினால் இரசாயன ரீதியாக எளிய கூறுகளாக மாற்றப்படல்.

போசணைக்கூறுகளின் இரசாயனச் சமிபாடு

i. காபோவைதிரேற்று:-

மாப்பொருள் —(அமிலேசு)→ மோல்றோசு —(மோல்றேசு)→ குளுக்கோசு

சுக்கிரோசு —(சுக்ரேசு)→ குளுக்கோசு + பிரற்றோசு

இலக்றோசு —(இலக்றேசு)→ குளுக்கோசு + கலக்றோசு

ii. புரதம் —(பெப்சின்)→ பல்பெப்தைட்டு —(பெப்திடேசு)→ அமினோவமிலம்

iii. இலிப்பிட்டு —(இலிப்பேசு)→ கொழுப்பமிலம், கிளிசரோல்

03. i. மனித சிறுகுடலில் சமிபாடடைந்த போசணைக்கூறுகளை அகத்துறிஞ்சுவதற்காக காணப்படும் கட்டமைப்பு எது? ....

ii. மேற்படி கட்டமைப்புக்கள் காணப்படுவதன் அனுகூலம் ஒன்றைக் குறிப்பிடுக. ....

iii. மேற்குறித்த கட்டமைப்பின் பின்வரும் இரு பகுதிகளினாலும் அகத்துறிஞ்சப்படும் சமிபாட்டு இறுதி விளைவுகளைக் குறிப்பிடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

a. குருதி மயிர்க் குழாய்: .... b.பாற்கலன்: ....

iv. Entamoeba histolitica எனும் பற்றீரியாவினால் ஏற்படும் நோய்ப் பாதிப்பினையும் இதன் அறிகுறிகளையும் எழுதுக.

நோய்: .... அறிகுறிகள்: ....

கழிவகற்றல்

- கழிவுகள்:- உடலின் அனுசேபத் தொழிற்பாடுகளின்போது தோன்றும் தீங்கு பயக்கும் பக்க விளைபொருட்கள் கழிவுகளாகும்.
- அனுசேபம்:- உடலில் நடைபெறும் சகல உயிர்ச்செயன்முறைகளும் அனுசேபம் ஆகும். இது 2 வகைப்படும்.

i. உட்சேபம்: எளிய பதார்த்தங்களிலிருந்து சிக்கலான பதார்த்தம் தோன்றும் தாக்கங்கள்
உ+ம்: ஒளித்தொகுப்பு, புரதத் தொகுப்பு

ii. அவசேபம்: சிக்கலான பதார்த்தம் எளிய கூறுகளாக மாற்றப்படும் தாக்கங்கள்.
உ+ம்: கலச்சுவாசம், யூரியா தோன்றுதல்

04. மனித உடலில் தோன்றும் தேவையற்ற பதார்த்தங்களை வெளியேற்றுதல் கழிவகற்றல் ஆகும்.

i. கலச் சுவாசத்தின்போது நிகழும் தாக்கத்திற்கான சமப்படுத்தப்பட்ட இரசாயனச் சமன்பாட்டை எழுதுக. ....

ii. சிறுநீரகத்தின் தொழிற்பாட்டலகு எது? ....

iii. கலன்கோள வடிதிரவத்தில் காணப்படுவதும் சிறுநீரில் காணப்படாததுமான கூறுகள் இரண்டைக் குறிப்பிடுக. ....

iv. சிறுநீரகத்தினால் மேற்கொள்ளப்படும் தொழிற்பாடுகள் இரண்டைக் குறிப்பிடுக. ....

v. சிறுநீரகத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள் இரண்டையும் அதற்குரிய ஒவ்வொரு காரணியையும் எழுதுக. ....

பௌதிகவியல் தரம் 11 Waves & Optics

அதிர்வு (அலைவு):- ஒரு நிலைத்த புள்ளி பற்றி இரு பக்கங்களிலும் ஏற்படும் சந்தமான இயக்கம் அதிர்வு ஆகும்.

அலை:- அதிர்வொன்றின்போது துணிக்கையின் இடப்பெயர்ச்சி மாறும் விதத்தைக் காட்டும் வடிவம் அல்லது வரைபு அலை ஆகும்.

1. பின்வரும் அலை வகைகளுக்கு ஒவ்வோர் உதாரணம் எழுதுக.

i. பொறிமுறைக் குறுக்கலை .... ii. பொறிமுறை நீள்பக்க அலை ....
iii. மின்காந்த அலை ....

- **அலைகளின் வேகத்திற்கான சமன்பாடு** $V=f\lambda$

2. மின் அதிரி ஒன்றினால் உருவாகும் அலைகளின் அலைநீளம் 0.5m ஆகக் காணப்பட்டதோடு அவ் அலைகள் வளியில் 330 ms^{-1} எனும் வேகத்தில் பயணித்ததாயின் அதிரியின் அதிர்வெண் யாது?
3. மின்காந்த அலைகளின் இயல்புகள் இரண்டைக் குறிப்பிடுக.
4. பின்வரும் மின்காந்த அலைகளின் ஒவ்வொரு பயனை எழுதுக.

PUBLIC LIBRARY
JAFFNA

நுண்ணலை	செங்கீழ்க் கதிர்கள்	கழியூதாக் கதிர்கள்	X கதிர்கள்

(31ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி ஸஃப்லூல் அந்நஜ்ஜார்



முன்பொரு காலம் இருந்தது. அன்று வாழ்ந்த இஸ்லாமிய அறிஞர்கள் ஏக காலத்தில் இஸ்லாத்தையும் அறிவியலையும் தொழிநுட்பத்தையும் வளர்த்து பின்வந்த சந்ததிகளிடம் ஒப்படைத்தனர். பின்வந்த முஸ்லிம் சமூகம் இந்த அறிவுக் கருவூலங்களை சுமக்கும் வல்லமையைப் பெறாததால் அவற்றை மேற்கு நாடுகள் களவாடிச் சென்றன. முன்னைய காலத்தில் வாழ்ந்த அறிஞர்களின் பண்புகளைப் பெற்று முன்னைய முஸ்லிம் அறிஞர்களைப் போன்று இக்கால முஸ்லிம் அறிஞர்களும் மாற வேண்டும் என்ற நோக்கில் வாழும் மிகப்பெரும் புத்திஜீவியே கலாநிதி ஸஃப்லூல் அந்நஜ்ஜார் ஆவார்.

எகிப்தில் மிஷாரி எனும் கிராமத்தில் பிறந்த ஸஃப்லூலின் பாட்டனார் கிராமத்தை வழிநடத்தும் இமாமாக இருந்தார். ஸஃப்லூலின் தந்தை ஓர் ஆசிரியர். அவர் தனது குடும்பத்தினருக்கு உணவுடன் மார்க்க அடிப்படைகளையும் பண்பாட்டு விழுமியங்களையும் ஊட்டி வளர்த்தார். தனது குடும்ப உறுப்பினர்களுக்கு பிக்ஹ், தப்ஸீர், ஹதீஸ் போன்ற கலைகளைக் கற்பித்தார். தனது தந்தையுடனான இளமைக் கால அனுபவமொன்றை நஜ்ஜார் பின்வருமாறு நினைவுபடுத்துகின்றார்:

"நான் அல்குர்ஆனை மனனம் செய்து கொண்டிருக்கும்போது எனது தந்தை சிறு தூக்கத்தில் இருந்தாலும் நான் தவறுவிடும்போது உடனே திருத்தி விடுவார்."

தந்தையின் கண்காணிப்பில் நஜ்ஜார் எட்டு வயதிற்குள் அல்குர்ஆனை மனனம் செய்து கொண்டார். தனது ஆரம்பக் கல்வியையும் உயர் கல்வியையும் கிராமத்தில் பெற்றுக் கொண்ட பின் பட்டப் படிப்புக்காக கெய்ரோ பல்கலைக்கழகத்தில் புவியியற்துறையில் இணைந்தார். 1955ல் புவியியற் துறையில் சிறப்புப் பட்டம் பெற்று முதல் நிலை மாணவராக வெளியேறினார்.

நஜ்ஜாருக்கு அய்ன் ஷம்ஸ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக நியமனம் கிடைத்தது. அவர் ஒரு வருடம் மட்டுமே அங்கு கடமையாற்றினார். கல்வித் துறை சாராத பெற்றோலிய அகழ்வாராய்ச்சி, பொஸ்பேற் உற்பத்தி, காரிய உற்பத்தி போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு தான் கடமையாற்றிய நிறுவனங்களின் இலாபம் பன்மடங்காக அதிகரிக்கக் காரணமாக இருந்தார்.

1959ல் அறிஞர் நஜ்ஜாருக்கு மலிக் ஸுஊத் பல்கலைக்கழகத்தில் புவியியல் பீடத்தை ஸ்தாபிப்பதற்கு அழைப்பு வந்தது. அறிஞர் நஜ்ஜார் மலிக் ஸுஊத் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த காலப்பிரிவில் இங்கிலாந்தின் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் முதுமானிக் கற்கையைத் தொடரும் வாய்ப்புக் கிடைத்தது. முதுமானிக் கற்கையைத் தொடர்ந்து அங்கேயே கலாநிதிப் பட்டத்திற்கான கற்கையையும் தொடர்ந்து 1963ல் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

கலாநிதி நஜ்ஜாரின் திறமைகளை இனங்கண்டு கொண்ட பிரித்தானிய அரசு மேலும் நான்கு வருடம் அவர் மற்றுமொரு கலாநிதி ஆய்வை செய்ய (Post Doctoral Research Fellows) சகல ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தது. தனக்கு வழங்கப்பட்ட மேலதிக வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்ட கலாநிதி நஜ்ஜார் உலகப் புகழ் பெற்ற பல ஆய்வுகளை மேற்கொண்டார். இவ்வாய்வுகளைப் பரிசீலித்த பிரித்தானிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுப் பரிசோதகர் குழு அவ்வாய்வுகளை நூலுருப் படுத்துமாறு பிரித்தானிய அரசை வேண்டிக் கொண்டது. கலாநிதி நஜ்ஜாரின் 600 பக்கங்களைக் கொண்ட புவியியல் கற்கை தொடர்பான ஆய்வு பிரித்தானிய அரசால் வெளியிடப்பட்டது. இன்று வரை அவ்வாய்வு 17 தடவைகள் பிரித்தானிய அரசால் பதிப்பிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

1967இல் இங்கிலாந்திலிருந்து குவைத்துக்குச் சென்ற கலாநிதி நஜ்ஜார் அங்கே புவியியல் பீடத்தை ஆரம்பித்து அதன் பீடாதிபதியாக 1972ல் நியமனம் பெற்றார். 1977ல் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் வருகை தரு பேராசிரியராக (visiting profosser) ஒரு வருடம் பணியாற்றினார். 1978-1979 வரையான காலப் பிரிவில் கட்டார் பல்கலைக்கழகத்தில் புவியியற் துறை பீடாதிபதியாக கடமையாற்றினார்.

கலாநிதி நஜ்ஜார் புவியியற் துறையில் 85க்கும் மேற்பட்ட ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். இஸ்லாத்தையும் நவீன அறிவியலையும் தொடர்பு படுத்தி 40க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார். கலாநிதி நஜ்ஜார் இஸ்லாத்தையும் புவியியலையும் தொடர்புபடுத்தி பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் அல்குர்ஆனில் மலைகள், புவியியற் துறைக்கு முஸ்லிம்கள் வழங்கிய பங்களிப்புகள் என்பன குறிப்பிடத்தக்கன

கலாநிதி நஜ்ஜாரின் மற்றும் சில பங்களிப்புகள்

- வடகடலின் புவியியல் எல்லைக்கோட்டை முதன் முதலில் வரைந்தவர்.
- முப்பதுக்கும் மேற்பட்ட முதுமானி ஆய்வுக் கட்டுரைகளுக்கு மேற்பார்வையாளராக இருந்தவர்.
- எகிப்து, அரேபியா மற்றும் வளைகுடா நாடுகளில் புவியியற் துறையில் கலாநிதி ஆய்வுகளை மேற்கொள்வோரின் பிரதான மேற்பார்வையாளர்

தற்போது இங்கிலாந்தில் உள்ள Markfield Institute Of Higher Education என்ற நிறுவனத்தின் தலைவர். இவ்வாய்வு நிறுவனத்தில் கற்கும் மாணவர்களுக்கு இஸ்லாமிய பொருளாதாரம், இஸ்லாமிய வங்கியியல், இஸ்லாமிய வரலாறு, நவீன இஸ்லாமிய சிந்தனை, நவீன இயக்கங்கள், இஸ்லாத்தில் பெண்களின் வகிபாகம் போன்ற தலைப்புகளில் முதுமானி ஆய்வுகளையும் கலாநிதி ஆய்வுகளையும் மேற்கொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றனர்.

- பிரபலமான இணையதளமான www.elnaggarzr.com இவருடையதாகும்.
- உலகப் புகழ் பெற்ற பல விருதுகளைப் பெற்றவர்.
- பல்கலைக்கழகங்கள், புவியியற்துறை நிறுவனங்கள், இஸ்லாமிய அமைப்புக்கள் என்பவற்றில் மிக முக்கிய உறுப்பினர்.
- உலகப் புகழ்பெற்ற பல ஆய்வுகளின் மேற்பார்வையாளராகக் கடமையாற்றியவர்.

இஸ்லாமிய அழைப்பாளியாக கலாநிதி நஜ்ஜார்

தனது தந்தையின் ஈமானிய அரவணைப்பில் வளர்ந்த நஜ்ஜார் இஸ்லாமிய அழைப்புப் பணியிலும் தீவிர ஆர்வம் கொண்டிருந்தார். கல்வித்துறையில் எகிப்தில் மிகப் பிரபல்யம் பெற்றிருந்த கலாநிதி நஜ்ஜாரிடம் அழைப்புப் பணியிலும் தீவிர ஆர்வம் காணப்பட்டது. இஸ்லாமிய அழைப்புப் பணியில் இரு வித வழிமுறைகளை கலாநிதி நஜ்ஜார் மேற்கொண்டு வந்துள்ளார்.

1. மத ஒப்பீட்டாய்வு முயற்சிகள்
2. அல்குர்ஆனில் காணப்படும் அறிவியல் உண்மைகளை முன்வைத்து இஸ்லாமிய அழைப்பை முன்னெடுத்தல்.

இரண்டாவது வகையான வழிமுறையையே கலாநிதி நஜ்ஜார் அதிகம் பயன்படுத்தியுள்ளார். நவீன அறிவியல் உலகில் இஸ்லாமிய தஃவாவை முன்னெடுப்பதற்கான மிகச் சிறந்த ஊடகமாக அவர் அதனைக் கருதுகின்றார். கலாநிதி நஜ்ஜார் இஸ்லாமிய அறிஞர்கள் அனைவரும் இந்தத் துறையில் கவனம் செலுத்த வேண்டும் என விரும்புகின்றார்.

இன்றைய இஸ்லாமிய அறிஞர்கள் அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ள அறிவியல் உண்மைகளை நவீன அறிவியலுடன் இணைத்துக் கற்று அவற்றை மக்கள் மயப்படுத்துவதன் மூலம் சத்தியத்தை தெளிவுபடுத்தும் ஆற்றல்களை பெற்றுக் கொண்டால் தஃவாவில் அதிக தாக்கம் செலுத்தும் வழிமுறையாக அது மாறிவிடும். நவீன அறிவியலின் ஊடாக உலகம் பயன் பெற வேண்டுமாயின் அவ்வறிவியலை முஸ்லிம்கள் பற்றிப் பிடிக்க வேண்டும். ஒரு கையில் அறிவியலையும் மறுகையில் அல்குர்ஆனையும் ஏந்திக் கொள்ள வேண்டும். நாமே அறிவியலை உலகிற்கு அறிமுகப் படுத்தினோம். நாம் இன்று அதனை கைவிட்டு விட்டதன் காரணமாக பலவீனப்பட்ட சமூகமாக மாறியுள்ளோம். எனவே, இவ்வறிவியல் மீண்டும் எமது கைகளுக்குள் சிக்க வேண்டும். அல்குர்ஆனின் வெளிச்சத்தில் நவீன அறிவியலை கற்கும் ஆளுமைகள் உருவானால் மட்டுமே நாளைய சமூகம் இன்றைய அறிவியல் உலகால் பயன்பெற முடியும் என்பது கலாநிதி நஜ்ஜார் முஸ்லிம் உலகிற்கு முன்வைக்கும் பிரதான செய்தியாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

வினாப்பத்திரம் I — **நேரம் 45 நிமிடம்**

கோடிடப்பட்ட சொல்லுக்குப் பொருத்தமான, சரியான ஒத்த கருத்துக்கு கோடிடுக.

1. மாமரத்தில் இருந்த கனியை அணில் <u>உண்டது.</u>
   i. கண்டது ii. கடித்தது iii. புசித்தது

2. <u>இடர்</u>பட்டவர்களுக்கு சோமு உதவி புரிந்தான்.
   i. கடன் ii. துயர் iii. நோய்

3. நோயாளியின் <u>பிணி</u>க்கு வைத்தியர் மருந்து கொடுத்தார்.
   i. நோய் ii. சளி iii. மாத்திரை

4. வாசுகியின் <u>உபாயம்</u> ஆசிரியரிடம் பலிக்கவில்லை.
   i. நாடகம் ii. தந்திரம் iii. அபாயம்

5. <u>வயோதிபர்</u> மடத்திற்கு அன்பளிப்புகள் அனுப்பப்பட்டன.
   i. மூத்தோர் ii.இளையோர்
   iii. பிச்சைக்காரர்கள்

இரு படங்களுக்கும் பொருந்தாத சொல்லின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

6. 
   i. மழை
   ii. பழம்
   iii. வள்ளம் ....

7.
   i. சமுத்திரம்
   ii. குளம்
   iii. வளி ....

8.
   i. பாணி
   ii. இயற்கை
   iii. நுங்கு ....

9. 
   i. எடிசன்
   ii. கிரகம்பெல்
   iii. மார்கோனி ....

10. 
   i. தரைவழி
   ii. கடல்வழி
   iii. ஆகாயவழி ....

ஒழுங்கமைக்குக

11. | ரோ | ம் | ட | ட் | தே | ....

12. | கு | ங் | னி | ப | ....

13. ஒரு மாணவனின் பைக்கற்றில் 10 நாணயங்கள் உள்ளன. இவற்றின் பெறுமதி ரூபா 18 எனின், அந்த மாணவனின் பைக்கற்றில் இருந்த நாணயங்கள் எவை?

   i. ஐந்து ரூபா- 2, இரண்டு ரூபா- 3, ஒரு ரூபா 3, 50 சதம் 2

   ii. ஐந்து ரூபா- 2, இரண்டு ரூபா- 2, ஒரு ரூபா 4, 50 சதம் 8

   iii. ஐந்து ரூபா- 2, இரண்டு ரூபா- 1, ஒரு ரூபா 5, 50 சதம் 2

14. கீழே தரப்பட்டுள்ள உருக்களின் நிழற்றப்பட்ட பகுதியின் பின்னங்களை எழுதுக.



i. $\frac{1}{4}$ ii. $\frac{2}{8}$ iii. $\frac{1}{8}$



i. $\frac{2}{18}$ ii. $\frac{2}{9}$ iii. $\frac{4}{9}$

மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.

15. மிக அதிகளவு கொழுப்பைக் கொண்ட பழம் எது?
   i. அப்பிள் ii. விளாம்பழம்
   iii. ஆனைக் கொய்யா

16. வாகனங்களுக்கான வருடாந்த அனுமதிப் பத்திரம் பெற வேண்டிய இடம்?
   i. போக்குவரத்து சபை ii. பிரதேச செயலகம்
   iii. பொலிஸ் நிலையம்

17. ஆபரணங்கள் செய்யப் பயன்படும் பொருள் எது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. இரும்பு ii. தங்கம் iii. அலுமினியம்

18. உப்பைப் போட்டு வைக்கப் பொருத்தமான பாத்திரம்.

i. அலுமினியப் பாத்திரம் ii. பிளாஸ்டிக் பாத்திரம் iii. பித்தளைப் பாத்திரம்

19. வேரில் உணவு சேமிப்பைக் கொண்ட தாவரம்?

i. மரவள்ளி ii. கரட் iii. லீக்ஸ்

20. கரைவலையில் மீன் சேரும் மூலையை எவ்வாறு அழைப்பர்?

i. மடி ii. பறி iii. கூடை

பிழையான கருத்தை தரக்கூடிய வாக்கியத்தின் கீழ் கோடிடுக.

21. i. ஒரு வாழை பல குலைகளை ஈனுவதால் தான் வாழைப்பழத்திற்கு தட்டுப்பாடு ஏற்படுவதில்லை.

ii. எல்லாப் பொருட்களையும் ஒரே இடத்திற்கு கொண்டு வருவதுதான் சந்தை.

iii. மரங்களை நிழலுக்காகவும் நடுவர்.

22. i. யானைகளின் தந்தங்கள் பெறுமதிமிக்கவை.

ii. பூமி மக்கள் வாழ்வதற்கு உகந்த கோள் அல்ல.

iii. தாவரங்களுக்கும் உயிர் உள்ளது.

23. i. ஆயுத எழுத்து ஒன்றாகும்.

ii. உயிர் எழுத்துக்கள் பன்னிரெண்டாகும்.

iii. "ஊ" குறில் எழுத்தாகும்.

பின்வரும் சிங்கள சொற்களுக்கான கருத்தை எழுதுக.

24. சமனலயா .... 25. இர ....

26. செங்கோண முக்கோணமுள்ள உருவின் கீழ் கீறிடுக.

i. ii. iii. iv.





27. அருகில் தரப்பட்டுள்ள எண் சட்டத்தினால் வகைக் குறிக்கும் எண்குறி யாது?

i. 3003 ii. 3011 iii. 3111

28. ரவிக்குமார் தனது ஒன்பதாவது பிறந்த நாளை 20.09.2006இல் கொண்டாடினான். அவன் தனது மூன்றாவது பிறந்த நாளை எந்த ஆண்டில் கொண்டாடியிருப்பான்?

i. 1999 ii. 2000 iii. 2001

பூனை இனத்துப் போராளி
இப்புவியில் எதிர்த்துப் போராடி
இரையைப் பிடிக்க ஓடுகிறாய்
வேட்டையாடி மகிழ்கின்றாய்

29. இப்பாடலில் குறிப்பிடப்பட்ட விலங்கு.

i. பூனை ii. புலி iii. எலி

30. ஓடு என்பதன் எதிர்ப்பதம்.

i. நில் ii. நட iii. பாய்

31. பூனையின் ஒலி மரபு.

i. கத்தும் ii. சீறும் iii. உறுமும்

32. பாடலில் இடம்பெற்ற வினைச் சொற்கள் குறிக்கின்ற காலம்.

i. இறந்தகாலம் ii. நிகழ்காலம் iii. எதிர்காலம்

பின்வரும் படங்களுக்கான ஆங்கிலச் சொற்களை எழுதுக.

33.  34.  35. 

36. 430 முதல் 440 வரை உள்ள எண்களில் இரட்டை எண்கள் எத்தனை காணப்படுகின்றன?

i. 5 ii. 6 iii. 4

37. இரத்தினக்கற்களை அரிக்கும் கூடையை எவ்வாறு அழைப்பர்?

i. பறி ii. நாம்புவ iii. குல்லம்

38. நெருப்பு எரிய காற்றை வழங்கும் உபகரணம்.

i. துருத்தி ii. துறப்பணம் iii. இடுக்கி

39. பின்வருவனவற்றுள் தண்டில் காய்க்கும் கூட்டுப்பழம் எது?

i. விளிம்பி ii. நெல்லி iii. பலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. இயற்கையில் தாமாகவே தாவர வேரிலிருந்து கன்று/ நாற்றுக்கள் முளைக்கும் தாவரம் எது?

i. பலா ii. வத்தாளை iii. கறிவேப்பிலை

41. தென்னை வித்துகள் முளைக்க எடுக்கும் சராசரி காலம்.

i. 30 நாட்கள் ii. மூன்று மாதங்கள்
iii. 50 நாட்கள்

42. மிக விரைவாக முளைக்கும் வித்து எது?

i. பயறு ii. மர முந்திரிகை iii. பாகல்

43. மஞ்சள் நிறமான காய்கறிகள், பழங்களில் அதிகம் காணப்படும் விட்டமின் எது?

i. விட்டமின் B ii. விட்டமின் C
iii. விட்டமின் A

44. எண்ணெய் தயாரிக்கப் பயன்படும் வித்துக்கள் எவை?

i. சோளம், நிலக்கடலை
ii. ஆமணக்கு, இபில் இபில்
iii. எள்ளு, பருத்தி

45. எருக்கலைப் பூவின் நிறம் யாது?

i. வெள்ளை ii. மஞ்சள் iii. ஊதா

46. இறக்கை இல்லாத பூச்சிகள் யாவை?

i. தலைப்பேன், கரப்பான்
ii. இலையான், பேன்
iii. தலைப்பேன், உண்ணி

47. அக்காவை விட தங்கையிடம் குறைவாக இருப்பது.

i. நிறை ii. வயது iii. உயரம்

48. பின்வரும் தாவரங்களிடையே விரைவாக வளர்ச்சியடையக் கூடிய தாவரம்.

i. வாழை ii. மூங்கில் iii. பனை

49. இரும்பு வேலை செய்வோர் (கொல்லன்) சூடான பொருட்களை எடுப்பதற்கு பாவிக்கும் உபகரணம் எது?

i. தணல் இடுக்கி ii. குறடு iii. திறப்பு

50. மரங்களின் கரடு முரடான பகுதிகளை செதுக்குவதற்கு பயன்படும் உபகரணம்.

i. கோடரி ii. வாள் iii. வாச்சு

நேர்மைக்கும் உண்மைக்கும் என்ன வேறுபாடு?



ஆசிரியர் ஒருவர் தனது மாணவனிடம் கேட்டார்: "மகனே, நிறையப் பணம் இருக்கும் பை ஒன்று கீழே கிடந்து கண்டெடுத்தால் நீ என்ன செய்வாய்?"

"யாரும் பார்க்கவில்லை என்றால் நானே வைத்துக் கொள்வேன்" என மாணவன் பதிலளித்தான்.

ஆசிரியர் சொன்னார்; "நீ உண்மை பேசுகிறாய்; ஆனால், உன்னிடம் நேர்மை இல்லை."

தான் என்ன செய்வேன் என்பதை ஒப்புக்கொண்ட மாணவன் தான் உண்மையானவன் என்பதை வெளிப்படுத்தினான். ஆனால், அவனுக்குச் சொந்தமில்லாத பணப் பையை தானே வைத்துக் கொள்வதாகக் கூறியது அவனது நேர்மையின்மையை வெளிப்படுத்தியது.

நேர்மை என்பது அடிப்படையான ஒழுக்க மாண்பு (Value); உண்மையாயிருத்தல் அல்லது பொய்யாயிருத்தல் என்பது ஒரு பழக்கம் (Habit). எப்போதும் உண்மையே பேசும் பழக்கத்தை உடையவர்கள் முதல் முறை பொய் பேசும்போது பிடிபட்டு விடுகிறார்கள். மறுபக்கத்தில் எப்போதும் பொய்களையே பேசி வருபவர்கள் முதல் முறையாக உண்மை பேசும்போது தடுமாறுவர். ஒரு மனிதன் உண்மை பேசுபவனாக இருக்கலாம்; அதேவேளை அவன் நேர்மையற்றவனாகவும் இருக்க முடியும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

வினாப்பத்திரம் II **நேரம் 1 மணி 15 நிமிடம்**

பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

இந்த பிரமாண்டமான உலகில் நானே ராஜா. நீங்கள் விழித்துக் கொள்வதும் தூங்கச் செல்வதும் எனது இயக்கத்தினால்தான். பறவைகளாகட்டும், விலங்குகளாகட்டும், ஏன் மனிதர்களாகட்டும் எனது வரவை தினமும் எதிர்பார்த்தே ஆக வேண்டும். நான் உங்களுக்கு எத்தனையோ நன்மைகளை செய்கின்றேன். அதையெல்லாம் நீங்கள் நினைத்துப் பார்ப்பது கிடையாது. ஆனால், நிழலின் அருமை வெய்யிலில் தெரியும் என்று கூறி என்னை பெரும் கொடுங்கோலனாக முத்திரை குத்தி விடுகின்றீர்கள்.

ஆனால், உழவர்கள் என்னை மறப்பது கிடையாது. ஏதோ வருடத்தில் ஒரு தடவையாவது எனக்கு நன்றி கூறுகின்றார்கள். நீங்கள் என்னை வாழ்த்தினாலும் தூற்றினாலும் எனது கடமையில் இருந்து நான் விலகப் போவதில்லை. கடவுள் எனக்கு பிறப்பித்த கட்டளைப்படியே எனது கருமங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

1. இப் பந்திக்குப் பொருத்தமான ராஜா யார்?
   ....

2. உழவர்கள் எத் தினத்தில் நன்றி கூறுகிறார்கள். அப் பண்டிகையின் பெயர் யாது? ....

பின்வரும் சொற்களுக்கு பந்தியில் இடம்பெற்ற எதிர்ப்பதங்களைக் குறிப்பிடுக.

3. செங்கோல் .... 4. செலவு ....

5. பந்தியில் இடம்பெற்ற பழமொழி யாது?.......

பந்தியில் இடம்பெற்ற பலவின்பால் சொற்கள் இரண்டைப் பெயரிடுக.

6. .... 7..............................

8. உழவர்கள் என்பதன் எதிர்பாற் கருத்து யாது?
   ....

9. அதையெல்லாம் என்பதனைப் பிரித்து எழுதுக. .... +...........................

10. கருமங்கள் என்பதன் ஒத்த பதம் யாது? ....

வெற்றிடத்திற்கு வர வேண்டிய எண்ணின் கீழ் கீறிடுக.

11. 559+1099+109+ [ ] +666 = 2932

i. 399 ii. 409 iii. 499

12. [ ] +999+9099+909 = 11 916

i. 909 ii. 199 iii. 919

13.



இதன் சுற்றளவு =.....cm

14.



இதன் சுற்றளவு = ...cm

15. சூரிய கிரகணம் தோன்றும் தினம்.

i. பௌர்ணமி ii. அமாவாசை iii. வளர் பிறை

16. நீரில் நன்றாக கரையக்கூடிய திண்மப் பொருட்கள் யாவை?

i. மா, சீனி ii. அப்பச்சோடா, பனடோல் iii. உப்பு, சாம்பர்

17. ஒருவர் தனியாகப் பயன்படுத்தும் பொருள் எது?

i. சவர்க்காரம் ii. தொலைபேசி iii. வானொலி

18. சிறகுகளை மடிக்காமல் தூங்கும் பிராணி எது?

i. கிளி ii. கரப்பான் iiii. தும்பி

19. தான் செல்லும் இடமெல்லாம் குஞ்சுகளைக் கூட்டிச் செல்லும் பிராணி எது?

i. புறா ii. காகம் iii. கோழி

20. எமது நாட்டில் 24மணி நேரமும் இயங்கும் அரச நிறுவனம்.

i. வைத்தியசாலை ii. தபால் நிலையம் iii. வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. ஞாபக சக்தி கூடிய மிருகம் எது?

i. யானை ii. பூனை iii. கோழி

22. ஒரு குறிப்பிட்ட காலத்தில் இத் தாவரத்தின் இலைகள் எல்லாம் உதிர்ந்து விடும் அத் தாவரம்.

i. வேம்பு ii. இலவம் iii. மரமுந்திரிகை

23. நடும்போது இலைகள் கத்திரிக்கப்படும் தாவரம் எது?

i. தென்னை ii. வாழை iii. கமுகு

24. நாருரு வேருள்ள தாவரம் அல்லாதது எது?

i. வெங்காயம் ii. வாழை iii. கொய்யா

25. இலங்கை தபால் திணைக்களத்தின் இலச்சினையில் உள்ளது?

i. தபால் பெட்டி ii. முத்திரை iii. புறா

26. அண்மைக் காலத்தில் எமது நாட்டில் தீவிரமாகப் பரவிச் செல்லும் ஒரு நோய்.

i. மலேரியா ii. டெங்கு iii. விசர்நாய்க் கடி



27. இப்பாத்திரத்தில் உள்ள தண்ணீரின் அளவை லீற்றரில் எழுதுக.
.........................லீற்றர்

28. ஆங்கில அரிச்சுவடியின் ஒழுங்குப்படி எழுதப்பட்ட ஆங்கில எழுத்து வரிசையைத் தெரிவு செய்க.

i. A,C,E,G ii. E,H,K,L iii. D,H,M,Z

29. 1 kg மரவள்ளிக் கிழங்கின் விலை ரூபா 70.00 ஆகும். 1kg 750g மரவள்ளிக் கிழங்கு வாங்க எவ்வளவு பணம் செலுத்த வேண்டும்? ....

30. 99999+1 இன் பெறுமானம் எது? ....

31. 150g தேயிலையின் விலை 18.00 ரூபாவாகும். 800g தேயிலை வாங்க தேவைப்படும் பணம்.
....

32.

16	
28	24

37	41
49	45

52	56

மூன்று எண் கோலத்திலும் வித்தியாசமான எண்கோலம் எது? ....

கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவை வரைக.

33. 

34. இரவு வேளையில் பழமரத் தோட்டங்களில் நடமாடும் பிராணி எது?

i. கிளி ii. காகம் iii. வௌவால்

35. சிங்கள, தமிழ் புத்தாண்டுக் காலம் நெருங்கி வருவதை முன்னறிவிக்கும் பிராணி எது?

i. குயில் ii. மைனா iii. காகம்

36. சமையலறையில் இரவில் கரப்பான் பூச்சிகளின் நடமாட்டத்தை தடுக்கும் எளிய வழி எது?

i. பொறியுணவை வைத்தல்
ii. மின் குமிழை ஒளிரவிடல்
iii. பூச்சி மருந்து விசிறல்

37. வித்தை அகற்றிய பின் உணவாக சமைக்கும் காய்கறி வகை.

i. ஈரப்பலா ii. கத்தரி iii. பாகல்

38. வித்தை அகற்றிய பின் உண்ணும் பழவகை எது?

i. அப்பிள் ii. கொய்யா iii. பப்பாசி

39. சித்திரை மாதத்தில் பூக்கும் தாவரங்கள் யாவை?

i. வேம்பு, முருங்கை ii. மா, றம்புட்டான்
iii. நாவல், விளா

40. கூட்டுப் பழங்களுள் ஒன்று.

i. மா ii. துரியன் iii. தோடை

41. திரள் பழங்களுள் ஒன்று.

i. அன்னாமுன்னா ii. பலா iii. அன்னாசி

42. நீண்ட காலம் வாடாது இருக்கும் பூ.

i. மல்லிகை ii. அந்தூரியம் iii. வாழைப்பூ

இது என்ன வாக்கியம்?

43. தம்பி நீ அவனை ஏசாதே என முதலாளி கூறினார். ....

44. உனது வாயை மூடு. ....

45. நான் அங்கு வரலாமா? ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் ஆங்கில வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.

46. I am drinking milk ....

47. Go there ....

பின்வரும் சிங்கள வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.

48. கிரிபத் கன்ன..

49. வதுரு கன்ன..

பொருத்தமான விடையை எழுதுக.

(கீதம், ஒட்டுவதில், மணம், அடியொற்றி, வலது குறைந்தவர்)

50. ராமதாஸ் காந்தி அடிகளின் வாழ்க்கையை ....வாழ்ந்தார்.

51. ...... களுக்கு நாம் உதவ முன்வர வேண்டும்.

52. .... இசைத்தவன் அதற்கேற்றவாறு ஆடினான்.

53. ரவி .... பரப்பும் வாசனைத் திரவி யங்களை வைத்திருந்தான்.

54. கமலினி வாகனம் .... அக்கறை செலுத்தினாள்.

பின்வரும் வாக்கியங்களை ஒழுங்கமைக்குக.

55. சூழல் - பிறந்த - அழகானது - நான் - மிகவும்

....

56. நேசிக்க - நாம் - நாட்டை - ஒவ்வொருவரும் - வேண்டும் ....

பிழை திருத்தி எழுதுக.

57. காச்சல் ....

58. மரவெள்ளி ....

"அம்மா" என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களையேனும் கொண்டிருப்பதோடு எழுவாய், பயனிலை போன்றன பேணப்பட்டிருத்தல் அவசியம்.

1. ....

2. ....

3. ....

பணியாள் மீது பத்து வயது சிறுவனின் கரிசனை



ஒரு நாள். பத்து வயது சிறுவன் ஒருவன் ஐஸ்கிரீம் கடைக்குச் சென்று 'ஐஸ் கிரீம் கோண் எவ்வளவு?' என்று கடையிலுள்ள பணியாளரிடம் கேட்டான். அவர், "ரூபா எழுபத்து ஐந்து" என்றார். அந்தச் சிறுவன் தனது கையில் இருந்த பணத்தை எண்ணத் தொடங்கினான்.

பிறகு அவர், "சிறிய ஐஸ்கிரீம் எவ்வளவு?" என்று கேட்டார். கோபமடைந்த அவர், "அறுபத்தைந்து ரூபாய்" என்று பதிலளித்தார். அந்தச் சிறுவன், "எனக்குச் சிறிய ஐஸ்-கிரீம் கப் வேண்டும்" என்றான்.

ஐஸ்-கிரீம் சாப்பிட்டதன் பின்னர் அங்கிருந்து வெளியேறினான். அந்த வெற்றுத் தட்டை எடுக்க வந்த பணியாள், மனம் உருகிப் போனார். அந்தத் தட்டில் பத்து ரூபாய் சில்லறை நாணயங்கள் டிப்ஸாக வைக்கப்பட்டிருந்தன. அந்தச் சிறுவன் ஐஸ் கிரீமை வாங்குவதற்கு முன்னால் அவருக்கு ஏதாவது கொடுத்து உதவ எண்ணி இருக்கிறான். அவன் தனது உணர்வையும் அக்கறையையும் கரிசனையையும் அவன் மீது காட்டி விட்டான். அவன் தன்னைப் பற்றி எண்ணுவதற்கு முன்னால், பிறரைப் பற்றி எண்ணியிருக்கிறான். குடும்பக் கஷ்டத்திற்காக உழைக்கும் அந்தப் பணியாளின் மீதுள்ள கரிசனையையும் அன்பையும் வெளிப்படுத்தி அவரது மனதில் நீங்காது இடம்பிடித்து விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

மால்கம் போர்ப்ஸ், பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் இளநிலைப் படிப்பில் கற்றுக் கொண்டிருந்தபோது அங்கு வெளியான பத்திரிகைக் குழுவில் சேர்த்துக் கொள்ள மறுக்கப்பட்டார். பிற்காலத்தில் அவர் தொழில் உலகின் மிகவும் வெற்றிகரமான பத்திரிகையான போர்ப்ஸின் (Forbes) தலைமை ஆசிரியரானார். இந்த போர்ப்ஸ் பத்திரிகையில் தமது பேர் வர வேண்டும் என்று தான் பில் கேட்ஸும் கார்லொஸ் சிலிமும் (இவர் தான் இன்றைய உலகின் முதற்தர செல்வந்தர்) தவம் இருக்கின்றனர்.

படத்தைப் பார்த்து அவர் கூறினார்:

“எவரெஸ்ட் சிகரமே! முதலாவது முறை என்னை நீ தோற்கடித்துவிட்டாய். ஆனால் இரண்டாவது முறை நான் உன்னை வெல்வேன். ஏனென்றால் நீ எவ்வளவு வளர முடியுமோ அவ்வளவு வளர்ந்துவிட்டாய். ஆனால் நான் வளர்ந்து கொண்டே இருக்கிறேன்.”

பின்னர் ஒரு வருடம் கழித்து, மே 29இல் எவரெஸ்ட் சிகரத்தில் முதல் மனிதராக வெற்றிக் கொடி நாட்டினார்.

தடைகள்: வாழ்வின் படிக்கட்டுக்கள்

அலெக்ஸான்டர் கிரஹம் பெல் 1876ம் ஆண்டில் தொலைபேசியைக் கண்டுபிடித்த போது அதை வியாபார ரீதியில் தயாரிக்க யாரும் முன்வரவில்லை. அந்தத் தொலைபேசிக்கான ஒரு செயல் விளக்கத்துக்குப் பின் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ரூதர் போர்ட் சொன்னார், “அதிசயமான கண்டுபிடிப்புதான். ஆனால் இதனைப் பயன்படுத்த யார் முன்வருவார்கள்?”



இன்று தொலைபேசி அன்றாடத் தேவையாகி விட்டது கையடக்கத் தொலைபேசி இல்லாத மனிதர்களைக் காண்பதே அரிதாக உள்ளது. சுவிட்சர்லாந்து நாட்டில் ஒரு நபருக்கு இரண்டு கையடக்கத் தொலைபேசி வீதம் பயன்படுத்துகிறார்கள். தொலைபேசி இல்லையென்றால் சிலருக்கு வேலையே ஓடாது.

வாழ்வில் தடைகள் பல்வேறு வடிவத்தில் வரும். அவற்றைத் தாண்டும்போது சாதனையாகும். உலகிலேயே மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ட்டில் ஏறுவதற்கு எட்மண்ட் ஹிலாரி 1952ல் முயற்சித்தபோது அதில் தோல்வியடைந்தார். 2000 அடி உயரமான அதில் ஏறுவதென்றால் சாதாரண விடயமா? சில வாரங்களின் பின் இங்கிலாந்தில் நடைபெற்ற மாநாடொன்றில் அவர் பேசும்படி அழைக்கப் பட்டார். அங்கு வைக்கப்பட்டிருந்த எவரெஸ்ட் சிகரத்தின்

சாதனையாளர்களின் வாழ்வின் படிக்கட்டுக்கள் இப்படித்தான் இருந்தன.

“விடாமுயற்சிக்கு மாற்றமாக இந்த உலகில் எதுவுமே கிடையாது.”

-கால்வின் கூலிட்ஜ்

தடைகள் உங்கள் வாழ்வின் படிக்கட்டுகள். தினமும் படிக்கட்டுக்களில் பயணியுங்கள். தடைகள் தாண்டுங்கள். உங்கள் முயற்சிகளில் உறுதியாக இருங்கள்.

பில்கேட்ஸ் கணினிகளுக்கான ஒபரேடிங் சிஸ்டத்தை கண்டுபிடித்து ஒரு தொலைக்காட்சி கம்பனியிடம் காட்டியபோது அவர்கள்: “தொலைக்காட்சி என்றால் மக்கள் குதூகலமாகப் பார்த்துக் கொண்டிருப்பர். கணினி... இதெல்லாம் வேலைக்கு ஆகாது என்று கூறினார்” இன்று தொலைக்காட்சிகள் கூட கணினி உலகால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன.

ஸ்டீவ் ஜொப்ஸ் அப்பிளைத் தயாரிக்கும் முயற்சிகளில் இறங்கியபோது பிரபலமான விளம்பரக் கம்பனியிடம் சென்று அப்பிளுக்கான விளம்பரம் ஒன்றைத் தயார் செய்து தரும்படி கேட்டார். அதற்கு அவர்கள் “நாங்கள் சாதாரண கம்பனிக்கு எல்லாம் விளம்பரம் செய்வதில்லை என்று கூறினர்.

இன்று அப்பிளுக்கு விளம்பரமே தேவை இல்லை! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணங்களின் வண்ணங்கள்

பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி

எம்.எப். மின்ஹா, தரம்: 8
அல்/ஹிலால் மு.ம.வி
தம்பாளை

ஏ.எம். பயாஸா, தரம்: 8
அல்/ஹிலால் மு.ம.வி
தம்பாளை

லத்தீப் றுஸ்லியா, தரம்: 07
வ/அல்ஹாமியா மு.ம.வி
வவுனியா

எம்.ஏ. முஷ்ரிபா, தரம்: 9
மாறை/ஸாதாத் ம.வி
கொடபிடிய, அகுறஸ்ஸ

மின்ஹா முஸ்லிமீன், தரம்: 9
முஸ்லிம் பெ.அ.க
கள் எலிய

எம்.எச்.எப். றிஹானா, தரம்: 10
அல்மனார் தே.பா

அடுத்த சித்திரத்திற்கான தலைப்பு: **ஏப்ரல் விடுமுறை** இறுதித் திகதி: 20.04.2012



facebook இல்

Like

செய்யுங்கள்...

www.facebook.com/aharamJmf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Trend

Local:
Single copy: LKR 100.00/-
Annual Subscription: LKR 1400.00/-
6 Months Subscription: LKR 700.00/-

International:
India, Pakistan, Maldives, Singapore: LKR 2000.00
Middle East: LKR 2,200.00
England, New Zealand, Australia, Malaysia, Japan, Korea: LKR 2,400.00
United States: LKR 2,700.00

Contact Hilal at +94 777 849 169

Every month at your doorstep ...

with an assortment of fascinating stuff for the youth, the family, women and children. Presenting ideas & views and interpreting events and developments from a moderately balanced perspective.

#77, Demetagoda Road, Colombo-00900, Sri Lanka.
trendsmonthly@gmail.com | Tel: +94 777 849 169 | +94 11 2689324 | Fax: 2686030
www.facebook.com/thetrendjmf

Printed at IPC PRINTING PRESS, 23, De Vaas Lane, Grandpass, Colombo 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org